Registered as a NewsPaper

விலை ரூபா-7.00

# ஈழநாதம்

மக்கள் நாளிதழ்

பக்கங்கள்-14

நாதம் 15 | திருவள்ளுவர் ஆண்டு 2035 | ஆவணி-23 | 08-09-2004 | புதன்கிழமை | ஓசை -203

S.M கோல்ட் ஹவுஸ்
வவுனியா நகரில்
அசல் 22 கரட்
தங்க நகைகளை
உங்கள்
விருப்பத்திற்கேற்ப
தெரிவு செய்து
பெற்றுக்கொள்ள
S.M கோல்ட் ஹவுஸ்

இல:-46A, தர்மலிங்கம் வீதி,
வவுனியா.
(சி-10149) T.P: 024-222 4247

## மீனவர் மீதான தொடர் தாக்குதலை கடற்படை உடன் நிறுத்தவேண்டும்

### - முல்லையில் நடந்த பெரும் கண்டனப்பேரணி




(முல்லைத்தீவு)


மீனவர்கள் மீதான சிறிலங்கா கடற்படையினரின் தொடர் தாக்குதல்கள், அச்சுறுத்தல்கள் நிறுத்தப் படவேண்டும் எனக் கோரி முல்லைத்தீவில் மாபெரும் கண்டனப் பேரணி ஒன்று நேற்று நடைபெற்றது.

கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்தின் ஏற்பாட்டில் நடைபெற்ற இந்தப் பேரணி நேற்று மாலை 3.30 மணியளவில் முல்லைத்தீவு சமாசத்திற்கு முன்பாக ஆரம்பிக்கப்பட்டது. அங்கு பேரணியில் திரண்ட மக்கள் பலத்த கோசங்கள் எழுப்பி வர பேரணி முல்லைத்தீவு அரச அதிபர் செயலகத்திற்கு 4.30 மணியளவில் வந்தடைந்தது. அங்கு சிறிலங்கா சனாதிபதிக்குரிய மகஜரும் மற்றும் (14ஆம் பக்கம் பார்க்க)

# இனப்பிரச்சினைக்கான இறுதித் தீர்வு

# இடைக்கால த.அ.சபை வழங்குவதல்ல

## ஜே.வி.பி. அமைச்சர் விஜித ஹேரத் கூறுகிறார்



**இலங்கையின் இனப்பிரச்சினைக்கான இறுதித்தீர்வு இடைக்கால தன்னாட்சி அதிகாரசபையை வழங்குவது அல்ல என்று ஜே.வி.பியின் உயர்பீட உறுப்பினரும் அமைச்சருமான விஜிதஹேரத் தெரிவித்துள்ளார். இந்தியாவின் நாளிதழ் ஒன்றுக்கு வழங்கிய செவ்வியில் கருத்து வெளியிடுகையி லேயே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.**

இது தொடர்பாக மேலும் தெரிவிக்கையில்; இறுதித்தீர்விற்கான பேச்சுவார்த்தையின் ஓர் அங்கமாகவே இடைக்காலத் தன்னாட்சி அதிகார சபை யோசனை இருக்க முடியுமென்றும் வலியுறுத்தியுள்ளார்.

ஜே.வி.பி விடுதலைப்புலிகளால் முன்வைக்கப்பட்டுள்ள இடைக் காலத் தன்னாட்சி அதிகார யோசனைகளை நிராகரித்துள்ளதாகத் தெரிவித்த அவர் பேச்சுவார்த்தையின் இடைக் கட்டத்தில் கவனத்தில் எடுக்கப்படுமொரு விடயமாகவும் அனைத்து அரசியல் கட்சிகளதும் ஆர்வமுடையவர்களதும் கலந்துரையாடல்களுக்கு உட்படுத்தப்படும் ஓர் அடிப்படையாகவுமே இது விளங்குமென்றும் விஜித ஹேரத் தெரிவித்துள்ளார்.

(14ஆம் பக்கம் பார்க்க)

## ஐந்து மாவீரர் குடும்பங்களுக்கு வீடுகள் அமைத்து வழங்கல்

(அலுவலகசெய்தியாளர்)

மாவீரர் குடும்பங்கள் ஐந்துக்கு கிளிநொச்சிப் பிரதேசத்தில் ஐந்து வீடுகள் அமைத்துக்கொடுக்கப்பட்டுள்ளது. இரண்டு மாவீரர்களைக் கொண்ட நிரந்தரக் காணியினையுடைய மேற்படி ஐந்து குடும்பங்களுக்கும் கடந்த 6 ஆம் திகதியன்று மேற்படி வீடுகள் கையளிக்கப்பட்டன.

மாவீரர் போராளிகள் குடும்ப நலன்காப்பகத்தினரின் ஏற்பாட்டில் அமைத்துக் கொடுக்கப்பெற்ற மேற்படி வீடுகள் கையளிப்பு நிகழ்வில் தமிழீழ அரசியல்துறை துணைப்பொறுப்பாளர் (14ஆம் பக்கம் பார்க்க)

## கழுத்து வெட்டப்பட்ட நிலையில் யாழ்.இல் இளைஞனின் சடலம் மீட்பு


படம் தயா

(யாழ்ப்பாணம்)

யாழ்.நகரின் நாயன் மார்க்கட்டுப் பகுதியில் கழுத்து வெட்டப்பட்ட நிலையில் இளைஞன் ஒருவனது சடலம் நேற்றுக்காலை கண்டு பிடிக்கப்பட்டுள்ளது. கல்வியங்காடு இராச வீதிப் பகுதியைச் சேர்ந்த நவரத்தினராசா பிறேம்குமார் (வயது-25) என்பவரது சடலம் அதுவென பின்னர் அவரது தந்தையாரால் அடையாளங்காட்டப்பட்டுள்ளது.

நேற்று முன்தினமிரவு வீட்டிலிருந்து கடத்திச் செல்லப்பட்ட இவரது சடலம் நேற்று அதிகாலை நாயன்மார்க்கட்டு கனகரத்தினம் வீதியில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. ஆட்கள் நடமாட்டம் குறைந்த குளமொன்றின் முன்பாக வீதியோரமாக இவ்விளைஞனின் சடலம் கண்டு பிடிக்கப்பட்டிருந்தது. அதிகாலை வேளை வீதியால் பயணித்த பொது மக்கள் சிலர் சடலத்தை கண்டு பொலிசாருக்குத் தகவல் தெரிவித்துள்ளனர்.

இதையடுத்து குறித்த வீதி யூடான போக்கு (14ஆம் பக்கம் பார்க்க)

## சமாதான முயற்சிகள் மந்தமாக இருக்குமாயின் போர் நிறுத்த ஒப்பந்தத்திற்கு அபாயம் ஏற்படலாம்

### - தமிழ்க் கூட்டமைப்புத் தலைவர் இரா.சம்பந்தன்

சமாதான முயற்சிகளில் மந்தகரமான நிலைமை இருக்குமாக இருந்தால் அதன் காரணமாகப் போர் நிறுத்த ஒப்பந்தத்திற்குக் காலப்போக்கில் அபாயம் ஏற்படுவதை எவராலும் தடுக்க முடியாதென தமிழ்த் தேசியக்கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் அவர்கள் தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றத்தில் நேற்று உரையாற்றும் போது இரா.சம்பந்தன் சமாதான முயற்சிகள் பெரும் நெருக்கடிக்குள்ளாகி உள்ளதாகக் கூறியதை அடுத்து இது தொடர்பாக ஊடகமொன்று அவரிடம் கேட்டபோதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில் நாங்கள் ஆழமாகச் சிந்திப்போமாக இருந்தால் தவிர்க்க முடியாத நிலையில் தான் போய்க்கொண்டிருக்கிறது.

யுத்தம் தற்போது இல்லை என்ற காரணத்திற்காகச்சமாதானம்ஏற்பட்டு விட்டது. அல்லது இனிமேல் யுத்தம் ஏற்படாது என்ற முடிவிற்கு நாங்கள் எவரும் வர முடியாது.

போர் வெடிக்கக் கூடிய வாய்ப்புக்கள் உள்ளதா என அவரிடம் கேட்டபோது.

இல்லாமல் இல்லை ஏனெனில் சமாதான முயற்சிகள் முன்னெடுக் (14ஆம் பக்கம் பார்க்க)

## வவுனியாவிலிருந்து வன்னிப்பகுதிக்குச் செல்ல 03 பெண் போராளிகளுக்கு இராணுவம் தடை

### - மூன்றரை மணிநேரம் தடுத்து வைத்து இடையூறு

(செட்டிகுளம்)

வவுனியா இராணுவக் கட்டுபாட்டுப் பகுதியில் அரசியல் பணிக்காக வந்திருக்கும் போராளிகளின் சுதந்திரமான செயற்பாட்டுக்கு இராணுவம் தொடர்ந்தும் இடஞ்சலாக இருப்பதாகவும் இவ்வாறு இராணுவம் நடந்து கொள்வது மிகவும் வேதனையான ஒரு விடயமாக இருப்பதாகவும் வவுனியா மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் தி. ஞானவேல் தெரிவித்துள்ளார்.

நேற்று வவுனியாவில் இருந்து வன்னிப் பகுதிக்கு சென்ற மூன்று பெண் போராளிகளை வன்னிப் பகுதிக்குச் செல்ல விடாது மூன்றறை மணிநேரம் தடுத்து வைத்து அவர்களின் பிரயாணத்துக்குப் பெரும் இடஞ்சல் ஏற்படுத்தியிருப்பதாக வவுனியா மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளரால் வவுனியா போர் நிறுத்தக் கண்காணிப்பு குழுவுக்கு முறையிடப்பட்டிருப்பதாகவும், (14ஆம் பக்கம் பார்க்க)

## அமெரிக்க பயங்கரவாத தடுப்புப்பிரிவு தலைமை அதிகாரி இலங்கை விஜயம்



அமெரிக்க ராஜாங்க திணைக்கள பயங்கரவாதத் தடுப்பு பிரிவின் தலைமை அதிகாரி லார்ஜ் ஜேகொபர் பிளக் இந்த வாரம் இலங்கை வரவுள்ளார். இந்த தகவலை இலங்கையில் உள்ள அமெரிக்க தூதரகம் தெரிவித்துள்ளது. அவர் கொழும்பில் தங்கியிருக்கும் காலத்தில் வெளிநாட்டு அமைச்சின் அதிகாரிகள், இராணுவம் மற்றும் காவல்துறை அதிகாரி களையும் சந்தித்து கலந்துரையாடவுள்ளாா. 2002 ஆம் ஆண்டு முதல் பிளக் தமது பதவியை வகித்து வருகிறார். பயங்கர வாதத் தடுப்பில் ஈடுபட்டுள்ள நாடுகளுடன் தமது உறவைப் பகிர்ந்து கொள்ளும் வகையிலேயே பிளக்கின் விஜயம் அமைவதாக அமெரிக்க தூதரகம் தெரிவித்துள்ளது. அமெரிக்க ராஜாங்க திணைக்கள பயங்கரவாதத் தடுப்பு பிரிவு. ஏனைய நாடுகளின் பயங்கரவாத தடுப்பு துறையினருக்கு பயிற்சிகளையும் வழங்கி வருகிறது.

(32)

# மீனவர்கள் மீதான கடற்படையின் அச்சுறுத்தல்களை நிறுத்த விரைவான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும்

## சிறிலங்கா சனாதிபதிக்கு முல்லை கடற்றொழிலாளர் கூ.ச.ச. மகஜர்


(முல்லைத்தீவு)

சிறிலங்காக் கடற்படையினர் முல்லை. மாவட்ட மீனவர்கள் மீது நடத்தும் தாக்குதலால் அவர்கள் கடற்றொழிற்குச் செல்ல அஞ்சுகின்றனர். இவ் அச்சத்தைப் போக்க ஆக்கபூர்வமான விரைவான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென சிறிலங்கா சனாதிபதிக்கு முல்லை. மாவட்ட கடற்றொழிலாளர் கூட்டுறவுச்சங்கம் அனுப்பிவைத்துள்ள மகஜரில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நேற்று நடைபெற்ற பேரணியின் பின்னர் சமர்ப்பிக்கப்பட்ட இம் மகஜரில் தெரிக்கப்பட்டுள்ளதாவது:

முல்லைத்தீவு மாவட்ட மீனவர்களின் மீன்பிடித் தொழில் மீதான அச்சுறுத்தல் தடைகளை நீக்கும் முகமாக இவ் அறிக்கையினைத் தங்களின் விரைவான நடவடிக்கை வேண்டி எமது மீனவர்கள் சார்பில் வெளிப்படுத்துகின்றோம்.

முல்லைத்தீவுக் கடற்பரப்பில் அண்மைக்காலமாக கடற்படையினரின் தாக்குதல்களும், அச்சுறுத்தல்களும் அதிகரித்துள்ளது. இதன் காரணமாக கடற்றொழிலை நம்பி வாழும் மீனவர்களின் வாழ்வுக்கான ஜீவனோபாயம் கேள்விக் குறியாகியுள்ளது.



போர்நிறுத்தம், சமாதான பேச்சு வார்த்தை என்பன தொடங்கி இரு வருடங்களைத் தாண்டியும் எமது இயல்பு வாழ்வுக்கு இதுவரை வழியமைக்கவில்லை. அண்மையில் நடைபெற்ற இரு வேறு தாக்குதல்கள் தொடர்பாக கண்காணிப்புக் குழுவுக்கும், செய்மதி ஊடகங்களுக்கும் வெளிப்படுத்தியதில் எது வித நடவடிக்கை மாற்றங்களும் கடற்பரப்பில் ஏற்பட்டதாக உணரமுடியவில்லை. சம காலத்தில் முல்லைத்தீவுக் கடற்பரப்பில் நடைபெற்ற தாக்குதல்களைத் தங்களின் நேரடிக் கவனத்திற்கு சமர்ப்பிக்கின்றோம்.

தாக்குதல் 01:-

2004.07.21 புதன்கிழமையன்று கடற்றொழிலில் ஈடுபட்டிருந்த இரு மீனவர்கள் மீது கடற்படையினரின் கண்மூடித்தனமான தாக்குதல்கள் இடம்பெற்றது.

குறிப்பிட்ட தினத்தன்று அதிகாலை மூன்று மணியளவில் முல்லைத்தீவு வண்ணாங்குளத்தைச் சேர்ந்த கோ.பிரபாகரன் என்பவரும், சுமன் என்பவரும் மீன்பிடிப்பதற்காக படகில் சென்றிருந்தனர். இவர்களை வழிமறித்த கடற்படையினர் மீனவர் இருவரையும் விரட்டியதோடு சுமன் என்பவரை சேட்டில் பிடித்து இழுத்து டோராப்படகில் ஏற்றிய பின்னர் பிரபாகரனை ஓடித்தப்புமாறு கூறியுள்ளனர். சுமனை விட்டுப்போவதற்கு பிரபாகரன் மறுத்தபோது அவர்களது மீன்பிடிப்படகை டோராவுடன் இணைத்துக்கட்டி சிறிது தூரம் இழுத்துச் சென்றனர். பின்னர் சுமன் என்பவரை மோசமாகத் தாக்கி காலிலும், கையிலும் பிடித்துத் தூக்கி படகுக்குள் போட்டு விட்டு விரட்டி விட்டனர். தொழில் உபகரணங்களை இழந்த நிலையில் மயக்கமடைந்த சுமன் என்பவரை முற்பகல் 10 மணியளவில் பிரபாகரன் கரைசேர்த்த போது முல்லை மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதித்தனர். உளப் பாதிப்புக்கு உள்ளான இவர் இதுவரை கடலுக்கு செல்ல முடியாதுள்ளார்.

தாக்குதல் 02:-

2004.09.01 புதன்கிழமை அதிகாலை 5.00 மணியளவில் முல்லைதீவு அம்பலவன் பொக்கணைப் பகுதிக் கடற்பரப்பில் மிக மோசமான தாக்குதல் ஒன்று நடைபெற்றுள்ளது.

அம்பலவன் பொக்கணையிலிருந்து மீன்பிடிக்கச் சென்ற அந்தோனிப்பிள்ளை டானியல் என்பவரது படகினைக் கடற்படையினர் முற்றுகையிட்டு தாக்குதலுக்குள்ளாக்கினர். படகிலிருந்த நால்வரையும் கடலில் குதிக்குமாறு பணித்தனர். தமக்கு நீச்சல் தெரியாதென மீனவர்கள் அச்சம் தெரிவித்தபோது படகை நோக்கித் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப் பட்டவேளை மீனவர்கள் நால்வரும் தண்ணீரில் குதித்துப் பின்புறமாக அடித்தட்டில் பிடித்துத் தத்தளித்தனர். சிறிது நேரத்தின் பின் அவர்களைப் படகில் ஏறுமாறும் விரைந்து கரைக்குப் போகுமாறும் கூறி, கடற்படையினர் விரட்டியுள்ளனர். மயிரிழையில் உயிர்தப்பிய மீனவர்கள் சேதமடைந்த படகுடன் கரைசேர்ந்தனர்.

மேற்படி தாக்குதலின் பின்னர் கடலில் மீன்பிடிக்கச் செல்வதற்கு மீனவர்கள் அச்சம் கொண்டுள்ளனர்.

மேற்படி இரு வேறு தாக்குதல்களோடு மட்டுமல்லாமல் மீனவர்களை விரட்டுவதும் தொடருவதால் இன்று மீனவ மக்கள் அணிதிரண்டு அரசஅதிபர் பணிமனை முன்னதாக பேரணி நடத்தியுள்ளனர். அவர்களின் ஒருமித்த குரலாக வேண்டுதலாக இந்த அறிக்கையினைத் தங்களுக்கு வெளிப்படுத்துகின்றோம். இதன் மூலம் தங்களின் விரைவானதும் ஆக்கபூர்வமானதுமான நடவடிக்கையினை எமது மக்கள் நம்பிக்கையோடு எதிர்பார்க்கின்றனர். எமது மீனவ மக்களின் தொழில்சார் நலன்களையும் வாழ்வியலையும் மேம்படுத்துகின்ற குறிக்கோளினை முல்லை மாவட்ட கடறொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசமும், அதன் சங்கங்களும் உறுதிசெய்யும் முகமாக இந்தப் பகிரங்க அறிக்கையினை தங்கள் முன் சமர்ப்பிக்கின்றது. (20,கு)

## தமிழீழ மீட்புநிதிக் கடன் சான்றிதழ் தவறவிட்டோர் கருத்திற்கு,

### தமிழீழ மீட்புநிதிக்கடன் மீளல் - 2004

தமிழீழ மீட்புநிதிக்கடன் சான்றிதழை தவறவிட்டோர், 2004ஆம் ஆண்டிற்கான மீட்புநிதி மீளளிப்புப் பட்டியலில் தமது பெயர் தெரிவுசெய்யப்பட்டுள்ளதா என்பதை அறிந்து கொள்வதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

அடையாள ஆவணத்துடன் கீழ்காணும் நேர அட்டவணைக்கிணங்க வருகை தந்து 2004ஆம் ஆண்டிற்கான மீட்புநிதி மீளளிப்புப் பட்டியலைப் பார்வையிட்டுத் தமது தெரிவை உறுதிப்படுத்திக் கொள்ளுமாறு வேண்டுகின்றோம்.

| | | | | |
|---|---|---|---|---|
| 10.09.2004 (வெள்ளி) | | | | |
| அரசியல்துறைச்செயலகம் | - | மானிப்பாய் | காலை - 08.30 - 10.00 | மணி |
| அரசியல்துறைச்செயலகம் | - | சண்டிலிப்பாய் | மு.ப. - 10.30 - 12.00 | மணி |
| அரசியல்துறைச்செயலகம் | - | சுன்னாகம் | ந.ப. - 12.30 - 02.00 | மணி |
| அரசியல்துறைச்செயலகம் | - | நீர்வேலி | பி.ப. - 02.30 - 04.00 | மணி |
| 11.09.2004 (சனி) | | | | |
| அரசியல்துறைச்செயலகம் | - | வல்வெட்டித்துறை | காலை - 08.30 - 10.00 | மணி |
| அரசியல்துறைச்செயலகம் | - | தம்பசிட்டி | மு.ப. - 10.30 - 12.00 | மணி |
| அரசியல்துறைச்செயலகம் | - | கரவெட்டி | பி.ப. - 01.00 - 03.00 | மணி |
| 12.09.2004 (ஞாயிறு) | | | | |
| அரசியல்துறைச்செயலகம் | - | கைதடி | காலை. - 08.30 - 09.30 | மணி |
| அரசியல்துறைச்செயலகம் | - | சங்கத்தானை | மு.ப. - 10.30 - 12.00 | மணி |
| அரசியல்துறைச்செயலகம் | - | நல்லூர் | பி.ப. - 03.00 - 04.30 | மணி |
| 13.09.2004 (திங்கள்) | | | | |
| அரசியல்துறைச்செயலகம் | - | வேலணை | காலை. - 08.30 - 09.00 | மணி |
| வீரசிங்க மண்பம் | - | யாழ்ப்பாணம் | மு.ப. - 11.30 - 01.00 | மணி |
| 14.09.2004 (செவ்வாய்) | | | | |
| மத்தியகல்லூரி | - | கிளிநொச்சி | பி.ப. - 02.45 - 04.00 | மணி |

## கண்டாவளைப் பிரதேசத்திற்கு நீர் வழங்குவதற்கு ஏற்பாடு

கண்டாவளைப் பிரதேசத்தில் வரட்சியால் மிகவும் பாதிக்கப்பட்டு தண்ணீர்த்தட்டுப்பாடு உள்ள கிராமங்களுக்கு உடனடியாக உழவு இயந்திரங்கள் மூலம் தண்ணீர் தாங்கியில் நீர் எடுத்துச் செல்லப்பட்டு மக்களுக்குப் பிரயோகிப்பதற்கான ஆரம்பவேலைகள் தொடங்கியுள்ளதாக கண்டாவளைப்பிரதேச செயலக நிர்வாக உத்தியோகத்தர் இ. பத்மநாதன், தெரிவித்துள்ளார். சமுகசேவைத் திணைக்களத்தினாலும், வேள்விஷன் நிறுவனத்தினாலும், கிளி/ அரசஅதிபர் ஊடாக ஆயிரம் மீற்றர் கொள்ளவுள்ள கொள்கலன்கள் 33 கண்டாவளைப்பிரதேச செயலகத்திற்கு வழங்கப்பட்டுள்ளது. இதில் 25 கொள்கலன்கள் பாதிக்கப்பட்ட கிராமங்களில் வைக்கப்பட்டு எட்டு கொள்கலன்களில் கிணறுகளில் இருந்து நீர் நிரப்பப்பட்டு கரைச்சி வடக்கு ப.நோ.கூ.சங்க உழவு இயந்திரமூலமும், தனியார் உழவு இயந்திரங்கள் மூலமாகவும் நீர்விநியோகம் செய்ய உள்ளதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார். (14)


நல்லினப்பசுக்கள் விற்பனைக்குண்டு

யேசி இனப்பால் பசுக்கள் 25 வரையில் விற்பனைக்குண்டு. அதில் 13 வரையானவை பால் கறக்கும் நிலையில் கன்றுகளுடனும், கறக்கும் நிலையில் ஏனையவை, கன்று ஈனும் தறுவாயிலும் உள்ளன. இவை அனைத்தும் மொத்தமாக விற்பனைக்குண்டு.

தொடர்புகட்கு,
செல்லப்பிள்ளையார் அரிசியாலை,
புளியம்பொக்கணைச் சந்தி. (5037)

நன்றி தெரிவிக்கிறோம்

தமிழீழப் பொருண்மிய மேம்பாட்டு நிறுவன அனுசரணையுடன் விவசாயத் திணைக்களமும், கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களமும் இணைந்து நடாத்திய பொருண்மியக் கண்காட்சி 01.09.2004-05.09.2004 வரையான 5 தினங்கள் சிறப்பாக நடைபெற்றது. மேற்படி கண்காட்சி நிகழ்விற்குச் சகல வழிகளிலும் ஒத்துழைப்பு வழங்கிய வன்னிவேளாண் சேவை நிறுவனம், நியாப் கைத்தொழில்சார் நிறுவனங்கள், கமநலசேவை திணைக்களங்கள், யாழ். பல்கலைக்கழக விவசாயபீடம், விஞ்ஞானபீடம், கமக்கார அமைப்புக்கள் மற்றும் யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் உள்ளிட்ட அனைத்து மாவட்டங்களின் பாடசாலை அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள் மற்றும் விவசாயிகள், பொதுநலன்விரும்பிகள் அனைவரிற்கும் தமிழீழப் பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தினரும், கண்காட்சி ஏற்பாட்டுக் குழுவினரும் நன்றி தெரிவிக்கின்றனர்.

(சி-10390)

நேர்முகப் பரீட்சை

லண்டன் ஸ்ரீ கனக துர்க்கை அம்மன் ஆலய நிதி உதவியுடன் தமிழ் தகவல் தொழில்நுட்ப ஒழுங்கமைப்பும், தமிழீழ மாணவர் அமைப்பும் இணைந்து நடாத்தும் புதுக்குடியிருப்பு கணினி நிலையத்தில் புதிய கற்கை நெறியில் கலந்து கொள்ள விண்ணப்பித்த மாணவர்களுக்கான நேர்முகப் பரீட்சை நடைபெற இருப்பதால் விண்ணப்பித்த அனைவரையும் 10.092004 அன்று பி.ப.2.00 மணி தொடக்கம் 6.00 மணிவரை புதுக்குடியிருப்பு கணினி நிலையத்திற்கு வருகை தருமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.

தெரிவுசெய்யப்படும் மாணவர்களுக்கான வகுப்புகள் 13.09.2004 இலிருந்து நடைபெறும் என்பதை மகிழ்ச்சியுடன் அறியத்தருகிறோம்.

நிர்வாகம்,
தமிழீழ மாணவர் அமைப்பு

(5038)

# அணிவகுத்துச் சென்ற அமெ.படையினர் மீது பலூஜாவில் தீவிரவாதிகள் மற்றுமொரு தாக்குதல்

## - அதிரடிப்படையினர் பலி 8பேர் படுகாயம்

(பாக்தாத்)

**ஈராக்கில் அணிவகுத்துச் சென்றுகொண்டிருந்த அமெரிக்கப் படையினர் மீது தீவிரவாதிகள் வெடிகுண்டுகளை வீசியுள்ளனர். இதில் 06 அதிரடிப்படை இராணுவத்தினர் அதே இடத்தில் உடல்சிதறிப் பலியாகியுள்ளனர் எட்டுப்பேர் படுகாயமடைந்துள்ளனர்.**

இச்சம்பவம் நேற்று அதிகாலை பாலூஜாவிற்குஅருகே நடந்துள்ளது. தீவிரவாதிகளின் ஆதிக்கம் நிறைந்த இடம் பலூஜா நகரமாகும் இந்நகருக்கு அருகே பாக்தாத் செல்லும் தேசிய வீதியில் அமெரிக்கப்படையினர் அணிவகுத்துச் சென்றனர். இதன்போது தீவிரவாதிகள் வெடிகுண்டுகளை வீசித் திடீரென்று தாக்குதல் நடத்தியுள்ளனர்.


ஈராக்கிலுள்ள அமெரிக்க இராணுவத் தலைமையகம் இந்த உயிரிழப்புத் தகவலை உறுதிசெய்துள்ளது.

ஈராக்கில் அமெரிக்கத் தலைமையிலான கூட்டணிப் படையினருக்கு எதிரான தாக்குதல் நடவடிக்கைகள் நாளுக்கு நாள் அதிகரித்தும், தீவிரமடைந்தும் வருகின்றது.

நேற்று முன்தினம் இராணுவ வாகனத் தொடரணிமீது தீவிரவாதிகள் தற்கொலைத் தாக்குதல் நடத்தியதில் ஏழு அமெரிக்கப்படையினர் கொல்லப்பட்டனர். மூன்று படையினர் காயமடைந்தனர். அத்துடன் இரண்டு இராணுவ வாகனங்கள் முற்றாக எரிந்து அழிந்துள்ளன.

## கோரிக்கை

தமக்கு கூடுதலான பாதுகாப்பு வழங்கக்கோரி மெக்சிகோ ஊடகவியலாளர்கள் அந்நாட்டு அரசைக் கோரியுள்ளனர்.



பாக்தாத்தில் நகர ஆளுநரைக் குறிவைத்து நடத்தப்பட்ட குண்டுத் தாக்குதலில் சேதமடைந்த கார்(இச்சம்பவத்தில் ஆளுநர் தப்பிவிட்டாலும் ஒருவர் பலியானார்)

# பலஸ்தீனப் பயிற்சி முகாம்கள் மீது இஸ்ரேலிய ராணுவம் தாக்குதல்

(ஜெருசலேம்)

பலஸ்தீனத் தீவிரவாதிகளின் பயிற்சி முகாம்கள் மீது இஸ்ரேல் இராணுவத்தினர் நேற்றுக் காலை மேற்கொண்ட குண்டு வீச்சுத் தாக்குதலில் 13 பேர் உயிரிழந்துள்ளனர். 20 இற்கும் மேற்பட்டோர் படுகாயமடைந்துள்ளனர்.

பலஸ்தீனத்தீவிர வாதிகளுக்கும், இஸ்ரேல் இராணுவத்திற்குமிடையே அடிக்கடி மோதல் நடந்து வருகின்றன.

இந்நிலையில் மத்திய காஸாப் பகுதியில் பலஸ்தீனத் தீவிரவாதப் பயிற்சி முகாம் மீது இஸ்ரேல் இராணுவம் நேற்று அதிகாலை இந்தத் தாக்குதல் நடத்தியுள்ளது.

இராணுவ தாக்குதலை எதிர்த்து தீவிரவாதிகளும் தாக்குதல் நடத்தியுள்ளனர். இதன்போது ஏற்பட்ட சேத விபரங்கள் வெளியிடப்படவில்லை.

இஸ்ரேலிய இராணுவத்தினரின் தாக்குதலில் உயிரிழந்தவர்கள் பலஸ்தீனப் பொதுமக்கள் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த ஆறு மாதங்களில் காஸாப் பகுதியில் நடைபெற்ற மிகப்பெரிய தாக்குதல் இதுதான் என்று கூறப்படுகின்றது.

# அணுமின் உற்பத்திப் பிணக்கு பேசித்தீர்க்கக் கூடியதே

## –ஈரான் அறிவிப்பு

(தெகிரான்)

நமது நாட்டின் அணுமின் உற்பத்தித் திட்டங்கள் தொடர்பான பிரச்சினைகளைப் பேச்சு வார்த்தை மூலம் தீர்த்துக்கொள்ள முடியும் என்று ஈரான் தெரிவித்துள்ளது.

அச்சுறுத்தல் விடுப்பது நிலைமைகளை மேலும் சிக்கலாக்கும் என்று ஈரானிய ஆன்மீகப் பாதுகாப்புச் சபையின் தலைவர் தெரிவித்துள்ளார்.ஐக்கிய நாடுகள் அணுவாயுதக் கண்காணிப்பு அமைப்புடன் ஒத்துழைக்கத் தயார் என்றும் அவர் கூறியுள்ளார்.

ஈரான் இரகசியமாக அணுகுண்டை வடிவமைத்து வருகின்றது என்று அமெரிக்கா குற்றம் சாட்டுகின்றது. இந்தப்பிரச்சினையை பாதுகாப்புச் சபையில் அறிவித்து அந்நாட்டின் மீது பொருளாதாரத்தடைகளை ஏற்படுத்துமாறு ஐக்கிய நாடுகள் கண்காணிப்பு அமைப்பிடம் அமெரிக்கத தலைவர்கள் வலியுறுத்துகின்றனர்.

ஆனால் மின்சாரத்தை உற்பத்தி செய்வதற்காகவே அணுவாலைகள் இயங்குவதாக ஈரான் கூறுகின்றது.



அமெரிக்காவின் புளோரிடாவில் வீசிய கடும் சூறாவளி காரணமாக மரம் ஒன்று முறிந்து வீட்டின் மீது விழுந்துள்ளது.



ஐரோப்பியாவிலே இவ் வருடம் நடத்தப்பட்ட சர்வ தேசப் பாராட்டைப் பெற்ற விமான சாகஸ நிகழ்வில் பங்கேற்கும் ஹண்டர் ரக விமானம்.

# கோரிக்கையை ஏற்காவிடில் பத்திரிகையாளர் கொல்லப்படுவர்

## –பிரான்ஸ் பத்திரிகையாளர் குறித்து ஈராக் தீவிரவாதிகள்

(பாக்தாத்)

2 நாளுக்குள் ரூ.35 கோடி தராவிட்டால் 2 பிரான்ஸ் பத்திரிகையாளர்களின் தலையை துண்டிப்போம் என்று ஈராக் தீவிரவாதிகள் இறுதிக் கெடு விதித்துள்ளனர்.

பிரான்ஸ் நாட்டைச் சேர்ந்த பத்திரிகையாளர்கள் கிறிஸ்டியன் செஸ்நட், ஜிலார்ஜஸ் மெல் பர்நட் ஆகியோரை ஈராக்கில் தீவிரவாதிகள் கடத்திப் பணயக் கைதிகளாக வைத்துள்ளனர். பிரான்சிலுள்ள முஸ்லிம் மாணவிகள் தலையில் முக்காடு அணிய விதிக்கப்பட்ட தடைச்சட்டத்தை 48 மணிநேரத்திற்குள் பிரான்ஸ் அரசு நீக்கவேண்டும் என்று விதித்தனர். அந்தக் கெடு முடிந்த பின்னர் தீவிரவாதிகளிடம் இருந்து எந்தத் தகவலும் இல்லை. தற்போது இஸ்லாமிய இராணுவம் என்ற அந்தத் தீவிரவாத இயக்கத்தினர் கடத்தப்பட்ட இரண்டு பிரான்ஸ் பத்திரிகையாளர்களின் படங்களையும், தங்கள் நிபந்தனைகளையும் இணையத்தளத்தில் வெளியிட்டுள்ளனர். அதில் தங்களுக்கு பணயத்தொகையாக ரூபா.35 கோடி தரவேண்டும். பின்லேடனுடன் போர் நிறுத்தம் செய்ய வேண்டும் ஈராக்குடன் எந்த விதமான வர்த்தக இராணுவத் தொடர்பும் வைத்துக்கொள்ளக் கூடாது. இந்த மூன்று நிபந்தனைகளில் ஏதாவது ஒன்றை 48 மணி நேரத்திற்குள் ஏற்க வேண்டும். அல்லது இரண்டு பிரான்ஸ் பத்திரிகையாளர்களையும் தலையைத் துண்டித்துக்கொன்று விடுவோம் என்று கூறியுள்ளனர். இது பற்றிப் பிரான்ஸ் கூறுகையில்; முதலில் கடத்தப்பட்ட இரண்டு பத்திரிகையாளர்களும் நல்ல உடல்நலத்துடன் இருக்கிறார்கள். அவர்களை விடுதலை செய்ய வாய்ப்பிருக்கிறது என்ற நம்பிக்கையை எங்களுக்கு ஏற்படுத்த வேண்டும் என்றார்.

# சிட்னி, மெல்போனில் பலத்த பனிமழை அனைத்து போக்குவரவுகளும் ஸ்தம்பிதம்

(மெல்போன்)

அவுஸ்திரேலியாவின் சிட்னி மெல்போன் நகரங்களில் திடீரென்று நேற்று முன்தினம் பலத்த பனி மழை பெய்துள்ளது.

இதனால் உருவான மோசமான காலநிலை காரணமாக விமானம் உட்பட அனைத்துப்போக்கு வரத்துக்களும் பாதிக்கப்பட்டுள்ளன.

சுமார் இரண்டு மணி நேரம் நீடித்த பனிமழையினால் சிட்னியிலும் மெல்போனிலும் பல அங்குலத்திற்கு பனிபடர்ந்து காணப்பட்டது. பனிப்புயலால் மின்னல் ஏற்பட்டதில் பல வீட்டின் கூரைகள் பாதிக்கப்பட்டுள்ளன. சில இடங்களில் தெருவிளக்குகள் பிடுங்கி எறியப்பட்டுள்ளன.

இதன் காரணமாக வாகனங் கள் கட்டுப்பாட்டை மீறிச் சென்றதில் வாகனச் சாரதிகள் பலர் காயமடைந்துள்ளனர்.



ரஷ்யாவில் பணயம் வைக்கப் பட்டிருந்து பலியான 10 வயதுச் சிறுமியின் உடல் மீது விழுந்து அழும் உறவினர்கள்.

# எல்லையில் போர்நிறுத்தத்தைத் தொடர இந்-பாக் வெளியுறவு அமைச்சுக்கள் முடிவு

(இஸ்லாமபாத்)

எல்லையில் போர்நிறுத்தத்தைத் தொடர்ந்து கடைப்பிடிப்பது இரு நாடுகளுக்கும் இடையேயான அனைத்துப் பிரச்சினைகளுக்கும் சிம்லா ஒப்பந்த அடிப்படையில் தீர்வு காண்பது உள்ளிட்ட அம்சங்கள் இரு தரப்பும் ஒப்புக்கொண்டுள்ளதாக இந்திய, பாகிஸ்தான் வெளியுறவுச் செயலர்கள் இருவரும் கூட்டாகச் செய்தியாளர்களிடம் நேற்று முன்தினம் கூறியுள்ளனர்.

அத்துடன் ஜம்மு-காஷ்மீர் உள்ளிட்ட அனைத்துப் பிரச்சினைகளுக்கும் தீர்வு காண்பது குறித்து நடைபெற்ற பேச்சுவார்த்தை திருப்திகரமாக இருந்ததாகப் பாகிஸ்தான் வெளியுறவுச் செயலர் கசூரி கூறியுள்ளார்.

இதனையடுத்துக் கசூரி இந்தியப் பெற்றோலிய அமைச்சர் மணிசங்கர் ஐயரைச் சந்தித்துப் பேசியுள்ளார்.இதனையடுத்து இறுதியாக கசூரி பிரதமர் மன்மோகன் சிங்கையும் சந்தித்துப் பேசியுள்ளார்.

# ஈரானிலிருந்து இந்தியாவிற்கு பாக்.ஊடாக குழாய் மூலம் டீசல்

(இஸ்லாமபாத்)

பஞ்சாப் மாநிலம் ஜலந்தரிலிருந்து லாகூருக்கு குழாய் மூலம் டீசல் அனுப்பும் திட்டம் குறித்து இந்திய பாகிஸ்தான் பெற்றோலியத் துறை அமைச்சர்கள் விரைவில் பேச்சுவார்த்தை நடத்தவுள்ளனர்.

பாகிஸ்தான் வெளியுறவு அமைச்சருடன் நடத்திய சந்திப்பின் பின்னர் இந்திய பெற்றோலியத்துறை அமைச்சர் மணிசங்கர் ஐயர் இதனை செய்தியாளர்களிடம் கூறியுள்ளார்.

இதேபோன்று இந்தியா-ஈரானுக்கிடையே குழாய் வழி டீசல் கொள்வனவை பாகிஸ்தான் ஊடாக கொண்டு வருவது குறித்தும் பேச்சுவார்த்தை நடத்தப்படும் என்றும் அவர் கூறியுள்ளார்.

- வவுனியா மாவட்டத்தில் -

# அரச காணிகள் ஏமாற்றி விற்பனை

# விழிப்புடன் நடந்து கொள்ள அறிவுறுத்து

(செட்டிகுளம்)

**வவுனியா மாவட்டத்தில் தற்போது சில நபர்கள் அரசுக்கு சொந்தமான காணிகளை ஏமாற்றி விற்பனை செய்து வருவதாகவும் இதன் காரணமாக காணிகளைக் கொள்வனவு செய்பவர்கள் விழிப்பாக இருக்குமாறு வவுனியா மாவட்ட அரச அதிபர் கே. கணேஷ் தெரிவித்துள்ளார்.**

காணிகளைக் கொள்வனவு செய்ய விரும்பும் அனைவரும் அவை தனிப்பட்ட காணியாயின் ஒரு சட்டத்தரணியின் ஆலோசனையுடன் வவுனியா காணிப்பதிவகத்தில் காணி சம்பந்தமான பரிபூரண விபரங்களை பரீட்சித்துப் பார்த்து காணிகளைக்கொள்வனவு செய்யுமாறும் தெரிவித்துள்ளார்.

அரச காணியாக இருந்தால் அவற்றுக்குரிய உறுதிப்பத்திரமோ தற்காலிக அனுமதிப்பத்திரமோ இருப்பினும் அக்காணிகளை விற்பதற்கு எவருக்கும் அனுமதி இல்லை ஆகவே எந்தக்கட்டத்திலும் அரசுக்கு சொந்தமான காணிகளை எவரிடம் இருந்தும் கொள்வனவு செய்வதையோ சட்டத்தின் மூலம் உறுதிக்காணிகளை எழுதி விற்பதையோ முற்று முழுதாக தவிர்த்துக்கொள்ளுமாறும் முறைகேடான விதத்தில் அரச காணிகளைக் கொள்வனவு செய்து இறுதியில் அரசாங்கத்தால் அக்காணியில் இருந்து வெளியேற்றப்படும் மக்களுக்கு எதுவித நஷ்ட ஈடும் கொடுக்கும் பொறுப்பு அரசாங் கத்திற்கு இல்லை. ஆகவே அரச காணிகள் சம்பந்தமாக எதுவித நடவடிக்கைகளையும் மேற்கொள் வதற்கு முன்னதாக தத்தமது பிரதேச செயலகத்தில் உண்மை நிலையை அறிந்து கொள்ளுமாறும் வவுனியா அரசஅதிபர் தெரிவித்துள்ளார். (21)




மாங்குளம் - வவுனிக்குளம் வீதியின் 6 கிலோமீற்றர் பகுதியில் ஒரு கிலோமீற்றர் புனரமைக்கப்பட்டுள்ளது. மற்றும் ஒரு கிலோமீற்றர் வீதி இரண்டரை மாதத்திற்கு முன் கிரவல் பறிக்கப்பட்டு தற்போது அரைகுறையாக வேலைகள் நடைபெற்றுள்ளன. ஏனைய நான்கு கிலோமீற்றர் தூரப் பகுதி எவ்வித புனரமைப்பு மின்றி குன்றும் குழியுமாக உள்ளது. இவ் வீதியில் மக்கள் போக்குவரத்தில் ஈடுபடும் அவலத்தை படத்தில் காண்க. (படம்.அன்ரனி)

# வேகமாக வந்த கன்டர் வாகனம் உந்துருளியுடன் மோதி விபத்து

உந்துருளியில் பயணித்தவர் படுகாயம்

(அலுவலக செய்தியாளர்)

உந்துருளியைக் கன்டர் மோதியதில் உந்துருளியில் பயணித்தவர் படுகாயமடைந்து. கிளிநொச்சி மாவட்ட



வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டு, சிகிச்சை பெற்றுவருகின்றார். மேற்படி சம்பவம் நேற்றுமுன் தினம் காலை 7.30 மணியளவில் கோவிந்தன் கடைச்சந்திக்கருகாமையில் இடம்பெற்றுள்ளது.

வட்டக்கச்சியிலிருந்து கிளிநொச்சி நோக்கி வந்துகொண்டிருந்த உந்துருளியை, அதேவீதியில் அதிவேகமாக வந்த கன்டர், மோதியது. இதன்போது உந்துருளியிற் பயணித்த புவனேஸ்வரன் (வயது55) என்பவரே காயமடைந்துள்ளார். அத்தோடு உந்துருளியும் பலத்த சேதத்துக்குள்ளாகியுள்ளது.

சம்பவம் இடம்பெற்ற இடம் மிகவும் ஆபத்தான இடமாகக் காணப்படுகின்றது. பிரதான வாய்க்கால் நீர் வீதியை அரித்துச் சிறிய இடமாகவுள்ள பகுதியிலேயே உந்துருளியை விலத்தி வர முற்பட்ட கன்டர் உந்துருளியுடன் மோதியுள்ளது.

மேலதிக விசாரணைகளை தமிழீழ காவல் துறையின் வீதிப்போக்குவரத்துப் பிரிவினர் மேற் கொண்டு வருகின்றனர்.

இதேபோன்று அன்றைய தினம் பிற்பகல் டிப்போச் சந்திக் கருகாமையில் நிறுத்திவைக்கப்பட்டிருந்த உந்துருளியுடன் மற்றுமொரு உந்துருளி மோதியதில் உந்துருளியில் பயணித்தவர் படுகாயமடைந்து, கிளி. மாவட்ட வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு, சிகிச்சை பெற்று வருகின்றார்.

விசுவமடுவைச் சேர்ந்த இ.யோகிஸ்வரன் (வயது 22) என்பவரே மேற்படி சம்பவத்தில் காயமடைந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது. (சோ,கு)

# கிரான்குளம் பகுதியில் சிறுவன்விபத்தில் பலி

மட்டக்களப்பு கிரான்குளத்தில் நேற்று இடம்பெற்ற வாகன விபத்து ஒன்றில் 9 வயதுச் சிறுவன் பலியானார். இவர் கடைக்குச் சென்று வீடு திரும்பிக்கொண்டிருந்த வேளையில் வேகமாக வந்த வாகனம் அவரை மோதியதாக அறிவிக்கப்பட்டுள்ளது. கிரான் குளம் இராணுவ கட்டுப்பாட்டுப் பிரதேசமாகும். (32)

# தள்ளாடி இராணுவ முகாமின் உள்வீதிகள் புனரமைப்பு

(செட்டிகுளம்)


தள்ளாடி இராணுவ முகாமில் உள்ள அனைத்து உள்வீதிகளும் தீவிரமாக இராணுவத்தால் புனரமைப்பு செய்யப்பட்டு வருவதாக தெரிவிக்கப்படுகிறது. தற்போது பொதுவாக வவுனியா, மன்னார் ஆகிய மாவட்டங்களில் உள்ள இராணுவ முகாம்களை இராணுவம் புனரமைப்புச் செய்து வருகின்றமையும் புதிய இராணுவ காப்பரண்களையும் அமைத்து வருகின்றமையும் குறிப்பிடத்தக்கது. (21)

# சிறுக்கண்டல் கிராமத்தில் தையல் பயிற்சிநெறி

(மன்னார்)

மன்னார் நானாட்டான் பிரதேச செயலர் பிரிவிற்குட்பட்ட சிறுக்கண்டல் கிராமத்தில் அண்மைக் காலத்தில் யுத்தத்தால் பாதிக்கப்பட்ட குடும்பங்களைச் சேர்ந்த இளம் யுவதிகள் 20 பேரிற்கு தையல்பயிற்சிவகுப்பு நடாத்தப் பட்டுவருகின்றது.பயிற்சிக்காலத்தில் இவர்களுக்கு மாதம் 1000 ரூபாய் கொடுப்பனவும் பயிற்சி வழங்கும் ஆசிரியருக்கு 2000 ரூபாய் கொடுப்பனவும் வழங்கப்படுகின்றது.

இதனைப் புனர்வாழ்வு நல்லிணக்க அமைச்சின் உதவியுடன் மன்னார் அரச அதிபர் ஆரம்பித்து வைத்தார். இந்நிலையம் இலாபம் ஈட்டக் கூடியவகையில் செயற்படுவதாகதெரிவிக்கப்படுகின்றது. (மி)



சிறிலங்கா இராணுவ ஆக்கிரமிப்பிலிருந்து மீட்கப்பட்ட பளை நகரில் நிகொட் திட்டத்தின்கீழ் 25லட்சம் ரூபா செலவில் கட்டப்பட்டு வரும் நீர் தொட்டியின் ஆரம்ப வேலையினை படத்தில் காணலாம். (படம்:-சசி)

# கிளி.மாவட்ட தமிழ்ச் சங்கத்தின் மாணவர் திறன்விருத்திப் போட்டிகள்

(அலுவலக செய்தியாளர்)

கிளிநொச்சி மாவட்ட தமிழ்ச் சங்கத்தினரால் கிளிநொச்சி மாவட்டப் பாடசாலைகளுக்கிடையில் நடாத்தப்பட்ட 2004ஆம் ஆண்டுதிருக்குறள், தமிழ் இலக்கியத்திறன் எழுத்துத் தேர்வு மற்றும் கலைத்திறன் போட்டிகளில் வெற்றியீட்டிய மாணவர்கள் மற்றும் பாடசாலைகளின் பெயர் விபரம் பின்வருமாறு,

<u>இலக்கியத்திறன் போட்டி</u>

பிரிவு 'அ' முதலாமிடம் செல்வன் ச.இந்திரதாசன் கிளி.இந்துக்கல்லூரி, இரண்டாமிடம் செல்வன் ப.சசிதரன் கிளி.இந்துக் கல்லூரி, மூன்றாமிடம் செல்வி வி.மதிவதனி கிளி.இந்துக்கல்லூரி,

பிரிவு 'ஆ' முதலாமிடம் செல்வன் தி.துளசிகன் கிளி.மத்திய கல்லூரி, இரண்டாமிடம் செல்வி ஜெ.துஷாந்தி திருவையாறு உ.நி.பள்ளி, மூன்றாமிடம் செல்வி சி.வினோபா கண்டாவளை உ.நி. பள்ளி,

பிரிவு 'இ' முதலாமிடம் செல்வன் ஆ.அனுஷாந் கிளிநொச்சி உ.நி.பள்ளி, இரண்டாமிடம் செல்வி ஞா.கீர்த்திகா கனகபுரம் உ.நி.பள்ளி, மூன்றாமிடம் செல்வி இ.அனித்தா திருவையாறு உ.நி. பள்ளி, செல்வி தி.சுபாங்கி மத்திய கல்லூரி,

ஊக்கப்பரிசு செல்வன் செ.இறையீவன் இராமநாதபுரம் கிழக்கு அ.த.க.பள்ளி, செல்வி ச.அர்ச்சனா இராமநாதபுரம் கிழக்கு அ.த.க.பள்ளி, செல்வி பெ.யசோதினி இராமநாதபுரம் மேற்கு அ.த.க.பள்ளி, செல்வி த.யானுகா இராமநாதபுரம் கிழக்கு அ.த.க. பள்ளி, செல்வி தி.இறயீவினி கிளி. இந்துக்கல்லூரி,செல்வி அ.ரேணுகா பளை.மத்தியகல்லூரி செல்வி அ.மேற்றலினா கனகபுரம் உ.நி. பள்ளி,

பிரிவு 'ஈ' முதலாமிடம் செல்வன் ய.கரிராம் இராமநாதபுரம் மேற்கு அ.த.க.பள்ளி, இரண்டாமிடம் செல்வி த.நிவேதா இராமநாதபுரம் மேற்கு அ.த.க.பள்ளி, மூன்றாமிடம் செல்வன் பு.தர்சன் இராமநாதபுரம் கிழக்கு அ.த.க.பள்ளி,

ஊக்கப்பரிசு செல்வன் நா.சுடர்வண்ணன் திருவையாறு உ.நி. பள்ளி, செல்வி.அ.சௌமியா இந்து தொடக்கப்பள்ளி, செல்வி யே. இல்டா இந்துதொடக்கப்பள்ளி, செல்வன் க.செந்துயன் இந்து தொடக்கப்பள்ளி, செல்வி சி.கோபிதா வட்டக்கச்சி உ.நி பள்ளி, செல்வன் இ.பயனத் இராமநாதபுரம் மேற்கு அ.த.க.பள்ளி, செல்வன் பா.அட்சயன் பரந்தன் இந்து உ.நி.பள்ளி.

<u>கலைத்திறன் போட்டி</u>

<u>பிரிவு</u>

நாவன்மை:- 1ஆம் இடம் ஆ.சர்மிளா கனகாம்பிகைக்குளம் அ.த.க.ப, 2ஆம் இடம் ஐ.கரிராம் இராமநாதபுரம் மேற்கு அ.த.க. பள்ளி, 3ஆம் இடம் கு.கீர்த்தனன் கனகபுரம் உ.நி.ப.

பிரிவு இ

1ஆம் இடம் ஜெ.ஜெயமாருதி இராமநாதபுரம் உ.நி.ப. மகாவித்தியாலயம், 2ஆம் இடம் சி.கீர்த்திகா இராமநாதபுரம் உ.நி.ப.வித்தியாலயம், 3ஆம் இடம் ச.சங்கீதா முருகானந்தா உ.நி.ப. மகாவித்தியாலயம், ச.வேணிலன் இந்துக் கல்லூரி.

பிரிவு ஆ

1ஆம் இடம் செ.தாரணி இராமநாதபுரம் உ.நி.ப.மகாவித்தியாலயம், 2ஆம் இடம் த.துளசிகன் மத்திய கல்லூரி, 3ஆம் இடம் தி.ஸ்ரீரஜீவன் இந்துக்கல்லூரி.

பிரிவு அ

1ஆம் இடம் மு.கோகிலராணி கறுக்காய்தீவு அ.த.க.பாடசாலை.

<u>குறளிசை</u>

1ஆம் இடம் கிளி/கனகபுரம் மகாவித்தியாலயம், 2ஆம் இடம் கிளி/இராமநாதபுரம் மகாவித்தியாலயம், 3ஆம் இடம் கிளி/கிளிநொச்சி மகாவித்தியாலயம்.

<u>சங்கப்பாடல்</u>

1ஆம் இடம் இராமநாதபுரம் மகாவித்தியாலயம், 2ஆம் இடம் இராமநாதபுரம் மேற்கு அ.த.க.பாடசாலை, 3ஆம் இடம் தர்மபுரம் மகாவித்தியாலயம்.

<u>நாடகம்</u>

1ஆம் இடம் முருகானந்தா மகாவித்தியாலயம்

காவடி

1ஆம் இடம் கிளி/தருமபுரம் மகாவித்தியாலயம்.

<u>வினாடிவினா</u>

1ஆம் இடம் கிளி/தருமபுரம் மகாவித்தியாலயம். (சோ,கு)

# வடக்கு கிழக்கில் ஆசிரியர் பற்றாக்குறை

# தெற்கில் தேவைக்கதிகமாக 10000 பேர்

### தமிழர் ஆசிரியர் சங்கத் தலைவர் குற்றச்சாட்டு

**தென்னிலங்கையிலே சுமார் பத்தாயிரத்திற்கும் அதிகமான ஆசிரியா கள் தேவைக்கதிகமாக உள்ள போதும், வடகிழக்குப் பகுதியில் எண்ணாயிரத்திற்கும் அதிகமான ஆசிரியர் வெற்றிடங்கள் நிரப்பப் படாதுள்ளதாக இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தலைவர் த.பஞ்சலிங்கம் குற்றஞ்சாட்டியுள்ளார்.**

தமிழ் மாணவர் ஒன்றியத்தின் யாழ். மாவட்ட பணிமனைத்திறப்பு விழாவில் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு உரையாற்று கையிலேயே அவர் மேற்கண்ட குற்றச்சாட்டையெழுப்பினார். யாழ். மாவட்ட தமிழ் மாணவர் ஒன்றிய தலைவர் குணேந்திரன் தலைமை யில் இடம்பெற்ற பணிமனைத் திறப்பு விழாவில்அலுவலகப் பெயர்ப்பலகையினை யாழ். பல் கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் சு. மோகனதாஸ் திரைநீக்கம் செய்துவைத்தார். நாடாவை வெட்டி அலுவலகத் தினை வடக்குக் கிழக்குக்கான மனித உரிமைகள் முன்னேற்ற நிலையத்தின் பணிப்பாளர் வணக்கத்திற்குரிய கருணாரட்ணம் அடிகளார் திறந்துவைத்தார்.

நூற்றுக்கு மேற்பட்ட பாட சாலை மாணவமாணவிகள் மற்றும் பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள் இந் நிகழ்வில் கலந்துகொண்டிருந்தனர். அங்கு த.பஞ்சலிங்கம் மேலும் உரையாற்று கையில் "வடகிழக்குப்பகுதிகளில் ஆசிரியர் வெற்றிடங்களை நிரப் புவதற்கு அரசு எந்தவொரு நடவடிக்கையினையும் எடுக்கா மையினால் மாணவர்களது கல்வி யில் பின்னடைவுகள் ஏற்பட்டு வருகின்றது. குறிப்பாக ஆரம்பக்கல்வி உள்ளிட்ட முக்கிய கற்றல் செயற்பாடுகளுக்கான ஆசிரியர் பற்றாக்குறையாகவுள் ளது. (27)




# சுப்பிரமணியம் பூங்கா புனர்நிர்மாணம்

1990 ஆம் ஆண்டு யாழ். கோட்டையினை அண்டிய பகுதி களில் இடம்பெற்ற இராணுவ நடவடிக்கைகளையடுத்து அழிவுற் றிருந்த சுப்பிரமணியம் பூங்கா மீண்டும் விரைவில் பொதுமக்கள் பாவனைக்கெனத் திறந்து விடப் படவுள்ளது.

யாழ். குடாநாட்டில் கடந்த காலப்பகுதியினில் இருந்திருந்த ஒரேயொரு பூங்காவான சுப்பிர மணியம் பூங்காவை மீள் நிர்மா ணஞ்செய்ய யுனிசெப் அமைப்பு 2 மில்லியன் ரூபா நிதியுதவி யினை வழங்கியுள்ளது.

மேலதிக தேவைக்கான நிதி உதவியினை யாழ். மாநகரசபை தனது சபை நிதியிலிருந்து வழங் கவுள்ளது. இதனிடையே சுப்பிர மணியம் பூங்காவை அண்டியுள்ள பகுதிகளில் இருந்த யாழ். பொது சனநூலகம் மற்றும் தேவாலயம் என்பவை மீள் நிர்மாணம் செய் யப்பட்டுவிட்ட நிலையில் எஞ்சிய யாழ்.மத்தியகல்லூரி மற்றும் நீதி மன்ற வளாகப்பகுதிகளில் கட்டட நிர்மாணப்பணிகள் ஆரம்பிக்கப் பட்டு நடைபெற்று வருகின்றது.

இவற்றிற்கு மேலாக முற்ற வெளிப்பகுதியினையும் யாழ்.மாவட் டத்தின் சிறந்த பொழுதுபோக்கு மைய மாக மாற்றப் போவதாக யாழ்.மாந கரசபை அறிவித்துள்ளது. (27)




யாழ்.மாவட்ட தமிழ்மாணவர் ஒன்றியத்தின் அலுவலகம் திறப்பு விழாவில் உரைநிகழ்த்தும் யாழ்.பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் மோகனதாஸ்.

# யாழ்.செயலக அதிகாரிகளினால் நெடுந்தீவில் இடம் பெயர்சேவை

(யாழ்ப்பாணம்)

நெடுந்தீவுப் பகுதி மக்களுக்காக யாழ்.அரசசெயலகத்தினது நடமாடும் சேவை இன்று நெடுந்தீவு உதவிஅரசாங்கஅதிபர் பணி மனையில் இடம் பெறவுள்ளது.

யாழ்.நகரில் இருந்து மிகத்தூரத்தில் உள்ள நெடுந்தீவுப் பிரதேச மக்கள் யாழ். நகருக்கு வந்து யாழ்.அரச செயலகத்தின் சேவைகளைப் பெற்று தமது கருமங்களை நிறைவேற்ற முடியாதுள்ளனர்.

இதனைக் கவனத்திற் கொண்டு ஏற்பாடு செய்யப்பட்டுள்ள இந்த நடமாடும் சேவையால் நெடுந்தீவில் மீளக்குடியேறி வாழ்ந்து வரும் மக்கள் இறப்பு, பிறப்பு, விவாகப்பதிவு, அடையாள அட்டைபெறுதல், குடும்பஅட்டைகள் பெறுதல் வாக்காளர்கள் இடாப்பு பதிவு போன்ற யாழ்.அரசசெயலகத்தில் சேவைகளை பெற்றுக்கொள்ளலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது. (33)

# பருத்தித்துறையில் 2 ஆம் திகதி முதல் இரு மாணவரைக் காணவில்லை

(வடமராட்சி)

பருத்தித்துறைப் பகுதியினைச் சேர்ந்த பாடசாலை மாணவர்கள் இருவர் ஒரே தினத்தில் காணாமல் போயுள்ளதாக இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். அலுவலகத்தில் பெற் றோரால் முறைப்பாடு செய்யப் பட்டுள்ளது.பருத்தித்துறை ஓடக்கரை வீதியினைச் சேர்ந்த வர்களான செல்வமோகன் - அகிலன் (வயது13) மற்றும் நவரத்தினம் ஸ்ரீராம் (வயது14) ஆகியோரே காணாமல் போன வர்கள் ஆவர்.கடந்த 2ஆம் திகதி காலை வேளையில் வீட்டிலிருந்து புறப்பட்டுச்சென்ற இவர்கள் இது வரை வீடு திரும்பவில்லையென அம்முறைப்பாட்டில் பெற்றோர் தெரிவித்துள்ளனர்.

இம் மாணவர்கள் பருத்தித் துறை ஹாட்லிக் கல்லூரி மற்றும் சித்தி விநாயகர் வித்தியாலயம் என்பவற்றில் கல்விகற்று வரு வதாகக் கூறப்படுகிறது. (27)

# தமிழ் மாணவர் ஒன்றியத்தால் வறிய மாணவருக்கு கொப்பிகள்

(யாழ்ப்பாணம்)

யாழ். கொழும்புத்துறை மற் றுமஅரியாலைப் பகுதிகளில் வாழும் வறியமாணவர்களின் கற்றல்நடவடிக்கைகளை ஊக்கு விப்பதற்காக தமிழ் மாணவர் ஒன்றியத்தால் அப்பியாசக் கொப்பிகள் வழங்கப்பட்டுள்ளன. கடந்தகாலஇராணுவ ஆக் கிரமிப்பு நடவடிக்கைகள் மற்றும் இடப்பெயர்வுகளால் பாதிக்கப் பட்டு வறுமைக்கோட்டின்கீழ் வாழ்ந்துவரும் குடும்பங்களைச் சேர்ந்த சிறார்கள் பலர் தமது கல்வியைத் தொடர்வதில் பல வித சிக்கல்களையும் எதிர்கொள் கின்றனர்.இவ்வாறான மாணவர்க ளதுநலனைக்கவனத்தில் கொண்டே உதவிவழங்கப்பட்டுள்ளது. (33)

# இராணுவ வாகனம் -பாரஊர்தி மிருசுவிலில் நேருக்குநேர்மோதல்

### -இரு வாகனங்களும் கடும்சேதம்

(தென்மராட்சி)

மிருசுவில் சந்தியில் நேற்றுக் காலை 11.30 மணியளவில் முகமாலையில் இருந்து யாழ்ப் பாணம் நோக்கி மணல் ஏற்றி வந்துகொண்டிருந்த பாரஊர்தி யுடன் எழுதுமட்டுவாள் பகுதியில் உள்ள இராணுவ முகாமிற்கு சிறிலங்காப்படையி னரை ஏற்றிவந்த இராணுவக் கனரக வாகனம் ஒன்று நேருக்கு நேர் மோதிக் கொண்டதில் இரு வாகனத்தின் முன் பகுதிகளும் சேதமடைந்தன.

இதனால் இப் பகுதியில் போக்குவரத்துக்கள் பாதிக்கப் பட்டன. சம்பவம் நடந்த இடத் திலிருந்து இரு வாகனங்களும் இரண்டரை மணித்தியாலங் களுக்கு மேலாக எடுக்கப்படாத தால் இருபக்கங்களில் இருந்தும் வந்த வாகனங்கள் ஒரு வழிப் பாதையைப் பயனபடுத்த வேண் டிய நிலையேற்பட்டது. இந்த விபத்துகுறித்து கொடிகாமம் சிறிலங்காப் பொலிசார் வழக்குப் பதிவுசெய்து விசாரணை நடத்தி வருகிறார்கள். (28)

### யாழ் அரசடிப் பகுதியில்

# போதைப்பொருள் வைத்திருந்த நபருக்கு அபராதம் விதிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் அரசடி வீதிப்பகுதியினுள் கஞ்சா போதைப் பொருளைப் பதுக்கி வைத்திருந்த நபரொருவர் மதுவரித்திணைக்கள அதிகாரிகளால் பிடிக்கப்பட்டு நேற்றுமுன்தினம் யாழ் நீதிமன்றில் ஆஜர்செய்யப்பட்டுள்ளார்.

குறித்த சந்தேக நபரை பதினையாயிரம் ரூபா தண்டப்பணம் செலுத்த உத்தரவிட்ட நீதவான் அத்துடன் மூவாயிரம் ரூபா தர்மப்பணத்தினை யாழ் .போதனாவைத்தியசாலையில் சிறுவர் பாது காப்புக் குழுவில் செலுத்தியபின் விடுவிக்கஉத்தரவிட்டுள்ளார். (27)

# இந். இருந்து நாடு திரும்பும் அகதிகள் அடையாளஅட்டை பெறுவதில் சிரமம்

(யாழ்ப்பாணம்)

இந்தியாவிலிருந்து நாடு திரும்பி யாழ்.குடாநாட்டில் மீளக் குடியமர்ந்துள்ள மக்கள் தமக் கான சிறிலங்காவின் அடையாள அட்டை மற்றும் பிறப்புச்சான்றிதழ் ஆகியவற்றைப் பெற்றுக்கொள் வதில் பெரும் சிரமங்களை எதிர் கொள்கின்றனர்.

இடம்பெயர்ந்து சென்று நீண்ட காலமாக இந்தியாவில் வாழ்ந் ததால் அவர்களை இலங்கைப் பிரஜைகள் என உறுதிப்படுத்து வதில் காணப்படும் நிபந்தனை மற்றும் விதிமுறைகளில் ஏற்பட் டுள்ள சிக்கல்கள் காரணமாகவே இடம்பெயர்ந்து இந்தியாவில் வாழ்ந்து விட்டு இவ்வாறு மீளக்குடியமரத்திரும்பியுள்ள மக்கள் தமக்கான ஆள்அடையாள அட்டை பிறப்புச்சான்றிதழ்கள் என்பவற்றைப்பெற்றுக் கொள் வதில் பல சிக்கல்களையும் எதிர் கொள்கின்றனர். (33)

# உபகரணங்கள் வழங்கல்

(யாழ்ப்பாணம்)

யாழ். சங்கானைப் பிரதேச மீனவர்களின் தொழில் முயற்சி களை மேம்படுத்துவதற்காக மூவி மொன்றோ எனும் தொண்டர் நிறுவனத்தினால் கடற்றொழில் உபகரணங்கள் வழங்கப்பட்டுள் ளன. போரினால் பாதிக்கப்பட்டு வறுமைக் கோட்டின் கீழ் வாழ்ந்து வரும் மேற்படி பிரதேச மீனவர் களது பொருளாதார மேம் பாட்டி னைக் கவனத்தில் கொண்டே இவ் உபகரணங்கள் வழங்கப் பட்டுள்ளன.அந்த வகையில் மேற்படி பிரதேச மீனவர்களுக்கு கட்டு மரங்கள், வலைகள், வெளியிணைப்பு இயந்திரங்கள் என்பன வழங்கப்பட்டுள்ளன. (33)

# ஆதவனின் அனுபவப் பகிர்வுகள்

அன்பு வாசகர்களே....!

நாடேஇல்லாத 'ஜிப்ஸி'க் கூட்டங்களின் கதையைப் பார்த்தீர்கள் ஒரு நாடில்லாமல் அலைவதன் துயரம் எனக்கும் தெரிந்தது தான்

* * * * *

கிரேக்க நாடு எல்லாவற்றிலும் சிறந்து விளங்கிய ஒரு நாடு.

நான் கிரேக்கத்திற்கு மூன்று, நான்கு தரம் போயிருக்கிறேன். நாடில்லாத ஜிப்ஸிகளின் கதை ஒரு புறம்மிருக்க, எல்லாத்துறைகளிலும் சிறந்து விளங்கிய கிரேக்கம் இதற்கு நேர் எதிர் மாறானது. இதனையும் உங்களுடன் பகிர்தல் வேண்டும்.

"உன்னை நீ அறிவாய்"

"தெரியாதவற்றின் எல்லைகளை தெரிந்து கொள்வது தான் அறிவு "

என்று முழங்கி.... நஞ்சைத்தானே அருந்தி மாண்டுபோன, நவீன தத்துவங்களுக்கெல்லாம் தந்தையாக விளங்கிய சோக்கிரட்டீஸ் பிறந்த பூமியது.

நான் தத்துவவியல் விரிவுரையாளர் என்ற வகையில், எப்பொழுதாவது கிரேக்கத்துக்கு ஒருதடவை போய்வரவேண்டும் என்ற எண்ணம் என்நெஞ்சில் ஆழப்புதையுண்டிருந்தது.

ஒரு நல்ல கோடைகால விடுமுறையில் கிரேக்கத்துக்குப் (Grece) பயணமானேன்.

கிரேக்கத்தின் தலைநகரம் எதென்சில் கால்வைக்கும் வரை....

சோக்கிரட்டீஸ் , பிளேட்டோ, அரிஸ்டோட்டில், டையோஜனிஸ், பைதோக்கிறஸ் போன்றவர்களையும் அவர்களின் தத்துவங்களையும் அசை போட்டபடியே விமானத்தில் இருந்தேன்.

ஒருமுறை வரலாற்றில் மகாஅலெக்ஸ்சாந்தர் எல்லாநாடுகளையும் போரில் வென்று சக்கரவர்த்தியாகி தன் பரிவாரங்கள் சூழ கிரேக்கத்திற்கு மீண்டு வந்தான். அப்போது அவனது அறிவுக் குருவாக டையோஜனிஸ் இருநதார். தன்படைசூழ வந்த அலெக்ஸ்சாந்தர் தன் வெற்றிச் செய்தியைக் கூறி ஆசிர்வாதம் வாங்கத் தனது குரு டையோஜனி சைத்தேடினான் டையோஜனிசோ ஒரு அமைதியான கடற்கரையில் சூரியக் குளிப்புச் செய்தபடி படுத் திருந்தார். சக்கரவர்த்தி மகா அலெக்ஸ் சாந்தர் தன் குரு இருக் கும் கடற் கரைக்கே போனான். பின்னால் அவனது மாபெரும் படையணிகள் நின்றிருந்தன. அவன் தன் குருவிடம் போய்... பணிந்து,

"குருவே... நான் சகல நாடுகளையும் வெற்றிவாகை சூடி மீண்டு வந்துள்ளேன் இந்த வேளையில் தங்களுக்கு என்ன வேண்டும்? எது கேட்டாலும் தருகிறேன் கேளுங்க்ள்'' என்றான். அதற்கு டையோஜனிஸ் சொன்னார்,

"கொஞ்சம் தள்ளிநில். அந்த சூரிய ஒளி என்மேற்படட்டும்"

என்று

எவ்வளவு நெஞ்சழுத்தம் கொண்ட சொற்கள் இவை



அக்ரொபலிஸ்

உலகிலேயே முதன்முதலில் பல்கலைக்கழகத்தை தோற்றுவித்தவர் பிளேட்டோ.

இவர் சோக்கிரட்டீசின் மாணவன். சோக்கிரட்டீஸ் எதையும் எழுதவில்லை அவர் வாய் மொழியாகவே எதென்ஸ் நகரத் தெருக்களில் பிரசங்கம் பண்ணிக்கொணடு திரிந்தார். அவரது கருத்துக்களை பிளேட்டோதான் நூல்களாக எழுதினார். பிளேட்டோ இல்லாது விட்டால் சோக்கிரட்டீசை உலகம் அறிந்திருக்காது.

பிளேட்டோவின் மாணவர்தான் அரிஸ்டோட்டில். அளவையியலின் தந்தையாக இன்றும் போற்றப் படுகின்றார்.

கேத்திர கணிதத்தின் தந்தையென வர்ணிக்கப்படும் பைதோகிரஸ் பிறந்த மண்ணும் கிரேக்கம் தான். இன்னும் இன்னும் எத்தனை மேதாவிகள் பிறந்தமண் அது. இங்கே பட்டியல் இடமுடியாது.

இவர்களை பற்றி நான் படித்தவற்றை மீட்டிய படியே ஒரு கனவில் நான் ஆழ்ந்திருந்த போது.....

"We Have Landed Athens air port (நாங்கள் எதென்ஸ் விமான நிலையத்தில் இறங்கிவிட்டோம்)"

என்ற விமானியின் குரல் என்னை இவ்வுலகத்திற்கு மீட்டு வந்தது.

குளிரும் பனியுமான நாடாகிய டென்மார்க்கில் இருந்து விட்டு எதென்சில் இறங்கியபோது அந்த விமான நிலையம் ஒரே வெப்பமாகவும் புழுதியாகவும்.... ஏதோ நான் வன்னியில் நிற்பது போலவும் பட்டது.

* * * * * * *

ஒரு விடுதியில் அறை ஒன்று எடுத்துத் தங்கினேன். அடுத்தநாள் எதென்சை சுற்றிப்பார்க்கக் கிளம்பினேன். எனக்கு Taxi யில் போவது அறவே பிடிக்காத விஷயம்

ஒரு குறிப்பிட்ட இடம் வந்தது நானே Taxi யை நிறுத்தச் சொன்னேன்.

"ஏன் இடையில் நிறுத்துகிறாய்" என்று சாரதி கேட்டான்.

"நான் நடக்கப்போகிறேன்'' என்று சொன்னேன்.

''இன்னும் நீண்ட தூரம் இருக்கிறதே" என்றான்.

"சோக்கிரட்டீஸ் Taxi யிலா இந்தத் தெருக்களில் பயணம் செய்து பிரசங்கம் பண்ணினார்?" என்று கேட்டேன்.

அவன் என்னை ஒரு விசரன் போல் பார்த்தான் நான் பிடிவாதமாய் இறங்கிக் கொண் டேன்.

அப்பாடா.... என்ற ஒரு உணர்வு

சோக்கிரட்டீஸ் நடந்த தெருக்களில் நானும் நடக்கிறேன். தூய்மையான அறிவின் தந்தை நடந்த தெருக்கள். அந்த தெருக் களில் என் கால்களும் பதிகின் றன. என் உடம்பெல்லாம் புல்லரிக் கிறது. கி.மு.2000 ஆம் ஆண்டளவில் மனித குலத்திற்கு நீதியையும் தூய்மையான அறிவின்வரையறைகளையும் முழங்கிய தெருக்களவை.

நான் நடந்து கொண்டே போனேன் எந்த குறுக்குத் தெருவுக்குள்ளும் கூசாமல் நுழைந்து நடந்தேன். ஒரு துளி பயம் கூட எனக்கு ஏற்பட்டிருக்கவில்லை. மரணத்தை வென்று யாருக்குமே அஞ்சாமல் தனது அறிவைப் புகட்டி..... நஞ்சைத்தானே பருகிய மகாமேதை பிறந்த மண். அவன் நடந்த தெருக்கள். அவற்றில் நடப்பதற்கு எனக்கென்ன பயம்? என் நெஞ்சினுள்ளே அவன் தந்த உத்வேகம் என்னை நடக்கப் பண்ணியது.

சொன்னால் யாரும் நம்பப்போவதில்லை. எனது கால்கள் நடந்து களைத்துப்போன நிலையில்- ஓரிடத்தில் சற்று ஓய்வெடுப்போம் என நினைத்து நின்றேன். எனக்கு முன்னால் சுண்ணாம்புக் கற்றூண்களின் இடிபாடுகளும் அதனைச சுற்றி முள்வேலிகளால் கட்டப்பட்ட வேலிகளும் இருந்தன. அங்கு ஒரு காவலாளியும் நின்றிருந்தான். என்ன அது என்ற உந்தலில் காவலாளியிடம் போய்க் கேட்டேன். அவன் சொன்னதை என் செவிகள் நம்ப மறுத்தன. அவன் சொன்னார்.

"சோக்கிரட்டீஸின் பெரும்பாலான பிரசங்கங்கள் அங்கேதான் நடந்தன'' என்று வாழ்க்கையில் பிறந்த பயனை அடைவது போன்ற ஒரு உணர்வில் மிதந்தேன். அங்கேயே ஒரு மணிநேரம் வரைநின்றிருந்தேன் என்ன சிந்தித்தேன் என்பது எனக்கு நினைவில்லை. ஆனால் நான் வாழ்நாளில் அப்படி ஒரு உணர்வில் ஒரு போதும் இருந்ததில்லை என்பது மட்டும் நினைவிருக்கிறது.

* * * * * *

நான் ஒரு நாடகன் என்பது வாசகர்களுக்கு நன்கு தெரியும். உலகின் முதல் நாடகன் தோன்றிய இடம் கிரேக்கம் முதல் துன்பியல் நாடகம் தோன்றிய இடமும் அதுதான். அந்த நாடக அரங்கு நிகழ்ந்த இடம் அதாவது அந்த அரங்கு திறந்தவெளியில் பல்லாயிரக் கணக்காண மக்களைத்தன் அரங்க நிகழ்வால் ஈர்த்துவைத் திருந்த அரங்கம்.. அதுதான் 'அக்ரொ பலிஸ்' இப்பொழுது நான் 'அக்ரோ பலிஸ்ல் நிற்கிறேன்.

ஆயிரக்கணக்கான ஆண்டுகள் முன்னர் பல்லாயிரக்கணக்கான பார்வையாளர்களை எந்தவித நவீன ஒலி ஒளி உபகரணங்கள் இல்லாமல் ஈர்த்துவைத்திருந்த 'அக்ரோ பலிஸ்' அரங்கத்தினுள் நுழைகிறேன்.

வியப்பு, ஆச்சரியம், அதிசயம் எல்லாம் கலந்த ஒரு உணர்வு. எப்படித்தான் முடிந்தது அவர்களால்? அந்த அரங்கில் இருந்து உரத்து.... என் பெரிய குரலில்

"உன்னையே நீ அறிவாய்" என்று கத்திப்பார்த்தேன்.

எனது குரல் ஒரு 30 யார்தான் கேட்கும் போல் இருந்தது. அவர்களால் எப்படி 500 யார்வரை கேட்க... பாடவும் பேசவும் முடிந் தது? மனித வலுவை ஒரு கணம் வியந்தேன். இங்குதானா'ஈடிபஸ்' மேடையேற்றப்பட்டது. எப்படி முடிந்தது? லட்சக்கணக்கான மக்களுக்கு ஒரு செய்தியை ஒரு நேரத்தில் அதுவும் உணர்வு களுடன் உடலையே மூல உபகரணமாகக் கொண்டு எப்படி நிகழ்த்த முடிந்தது? அதிசயத்தின் மேல் அதிசயம். அந்தக் காலத்தில் அங் கேயே நான் பிறந்திருக்கக் கூடாதா......என்று விசித்திரமான எண்ணம் வந்தது.'அக்ரோபலிஸ்' ஐ விட்டு நீங்கிவர மனமே இருக்க வில்லை. ஒருவாறு வந்தேன்.

நல்ல களைப்பாக இருந்தது. அருகில் ஒரு Bar இருந்தது. அதற்குள் நுழைந்தேன். நான் எந்த நாட்டிற்குப் போனாலும் அந்தந்த நாட்டின் தேசிய மதுவகைகளைச் சுவைத்துப் பார்ப்பது என் வழக்கம்.

## பகுதி 11

அந்த Bar இன் உள்ளே உள்ளூர்க குடிகாரர்கள் இருந்தார்கள். சுற்றுலாப்பயணிகளோ.. வேறு நாட்டவரோ எவரும் இருக்க வில்லை.

அங்கே இருந்தவர்கள் ஒருவருக்குமே ஆங்கிலம் தெரிந்திருக்கவில்லை. என்னை ஒரு மாதிரியாகப் பார்த்தார்கள். வெறுப்புக்கலந்தோ... எதிர்ப்புணர்வுடனோ... ஏளனமாகவோ பார்க்க வில்லை. ஆவலுடன் இவன் இதுக்கை ஏன் வாறான்? என்பது போலத தான் அவர்கள் பார்வை இருந்தது.

சற்று வயது முதிர்ந்த ஒரு நித்தியகுடிகாரனாக அணுகி... அவருக்குப் பக்கத்தில் இருந்த் கதிரையைக் காட்டி என் கைப் பாஷையால் இங்கே அமரலாமா எனக் கேட்டேன். தாராளமாக எனச் சைகை செய்தார்.

அமர்ந்து கொண்டேன்.அவர் குடிப்பதுதான் எனக்கும் வேண்டும். வாங்கித் தருவாயா? என்று கேட்டேன். தன்னிருகைகளையும் தட்டிப் பலமாக குலுங்கிக் குலுங்கிச் சிரித்தார் அவர்.

(அடுத்த வாரம் சந்திப்போம்)

# மகளிர் அரசியல் துறையினாரின் ஒழுங்கு படுத்தலில் கிராம தரிசிப்பு

முல்லைத்தீவு மாவட்ட மகளிர் அரசியல் துறையினரின் ஒழுங்குபடுத்தலில் முள்ளியவளைப் பிரதேசத்தில கிராமதரிசிப்பும், ஆய்வுக கலந்துரையாடலும் கடந்த வாரம் இடம்பெற்றது.

மேற்படி நிகழ்வானது பிரதேசத்திற்குட்பட்ட மாமூலை, நீலகண்டபுரம் ஆகிய கிராமங்களில் அரசியல்துறை சார்ந்தோர், உள்ளூர் அரச சார்பற்ற நிறுவனத்தினர், பிரதேச ஊரக தேசிய எழுச்சிப் பேரவையினர். ஒன்றிணைந்து ஒவ்வொரு குழுக்களாக அக்கிராமத்தில் உள்ள வீடுகளுக்கு சென்று அவர்களின் நிலைப்பாடு தொடாப்பாகவும் அவர்கள் எதிர் நோக்கும் பிரசசினைகள் தொடர்பாகவும் கேட்டறிந்து அனைவரையும் ஒன்றாக்கி மாமூலையில் அமைந்துள்ள M.R.RO நிறுவன ஒன்று கூடல் மண்டபத்தில் மாலை 3.30 மணிக்கு ஆய்வு ஆலோசனைக் கூட்டம் இடம் பெற்றது..

முள்ளியவளைப் பிரதேச மாதர் சங்கத் தலைவி விக்கினேஸ்வரி தலைமையில் நடைபெற்ற கூட்டத்தின் ஆரம்பத்தில் பொதுச் சுடரினை முள்ளிய வளை பிரதேச அரசியல்துறைப் பொறுப்பாளர் இ.நாகமைந்தன் ஏற்றிவைக்க தமிழீழ தேசியக் கொடியினை முல்லை மாவட்ட மகளிர் அரசியல்துறைப் பொறுப்பாளர் வேளினி ஏற்றி வைத்ததையடுத்து முதல் பெண் மாவீரர் மாலதியின் திருவுருவப்படத்திற்கான ஈகச்சுடரினை மாவீரர் பணிமனையைச் சேர்ந்த சசி ஏற்றி வைக்க மகளிர் அரசியல் துறை போராளி வைதேகி மலர் மாலையினை அணி வித்ததையடுத்து கருத்துரைகள் இடம்பெற்றன. கருத்துரையினை.

முல்லைமாவட்ட அரசியல் துறைப்பொறுப்பாளர் செ.முகுநதன், மாவட்ட மகளிர் அரசியல்துறைப் பொறுப்பாளர் வேளினி வன்னித் தொகுதி பாராளுமன்ற உறுப்பினர் சதாசிவம், கனகரத்தினம் மற்றும் மாதர் சங்க பிரதிநிதி ஆகியோர் நிகழ்த்தினர்.

தமிழீழ பெண்கள் எழுச்சி நாளினை முன்னிட்டு நடாத்தப்பட்ட கூட்டத்தில கிராம சேவையாளர்கள் பொது அமைப்புச் சார்ந்தவர்கள் அப்பகுதி பொது மக்கள் என பெருமளவானோர் கலந்து கொண் டமை குறிப்பிடத்தக்கது. (ஆ)

# ஆங்கில மொழிப் போட்டியில் முல்லை ம.வி மாணவர் பெறுபேறு

முல்லை கல்வி வலயத்திற்குட்பட்ட ஆங்கில மொழிப்போட்டியில் முல்லை மகாவித்தியாலய மாணவர்கள் பல வெற்றிகளை பெற்றுக் கொண்டனர்.கவிதை சொல்லல் போட்டியில் தரம் 6 பிரிவில் கே.நிரூபா 1ஆம் இடத்தையும், தரம் 8 பிரிவில் ஜி. அருண்ராஜ் 1 ஆம் இடத்தையும், தரம் 8 பிரிவில் எல்.அனாஎப்சியா 2 ஆம் இடத்தையும், தரம் 09 பிரிவில் வீநிரோசனா 1 ஆம் இடத் தையும்,தரம் 09 பிரிவில் ரி.அனோஜா 2 ஆம் இடத்தையும், தரம் 10 பிரிவில் எம்.தாமரைச்செல்வி 2 ஆம் இடத்தையும், தரம் 11 பிரிவில் எஸ்.திவ்வியா 1 ஆம் இடத்தையும், பெற்றுக்கொண்டனர். தரம்13 பேச்சு செல்வி யூட்எச்சியா. 1ஆம் இடத்தையும், தரம் 13 பேச்சு செல்வி அபிலாமென்சி 2 ஆம் இடத்தையும், ஆங்கில நாடகப்போட்டியில் தரம் 6-9 பிரிவு 1 ஆம் இடத்தையும், தரம் 10-13 பிரிவு 1 ஆம் இடத்தையும், ஆங்கிலப் பாடல் போட்டியில் தரம் 6-9 பிரிவில் ஆண்/பெண் 1 ஆம் இடங்களையும், தரம் 10-11 பிரிவில் ஆண்/பெண் முதலாம் இடங்களையும் பெற்றுக் கொண்டு முல்லை மகாவித்தியாலயத்துக்கு வெற்றியைப் பெற்றுக் கொடுத்தனர்.கடந்த 30,31 ஆகிய தினங்களில் முல்லைத்

தீவு மகாவித்தியாலயத்தில் ஆங்கில உதவிக் கல்விப் பணிப்பாளர் தவரட்ணம் தலைமையில் இவை நடைபெற்றது. வலயத்தில் 48பாடசாலைகள் போட்டியில் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது. (20)

முல்லைத்தீவு மாவட்டத்தில் நியாப் II திட்டத்தின் கீழ் மையக்கிராமங்களின் தெரிவு உடனடியாக ஆரம்பமாகித் திட்டத் தெரிவு நடைமுறைகள் பூர்த்தியான பின் 2005ஆம் ஆண்டு தைமாதத்திலிருந்து தெரிவுசெய்யப்பட்ட மையக்கிராமங்களின் நியாப்II திட்ட நடவடிக்கைகள் ஆரம்பமாகவுள்ளன.

எனவே, பொது அமைப்புக்கள் மூலமாக மையக்கிராமத் தெரிவுகள் தொடர்பாக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. இவ்விண்ணப்பங்கள் அனுப்பமுதல் தங்கள் பிரதேச அரசியல்துறைப் பொறுப்பாளர்களுடன் கலந்துரையாடி அவர்களின் கருத்துரையுடன் விண்ணப்பிக்கவும்.

கீழ்வரும் மாதிரிப்படிவத்தில் விண்ணப்பங்களை தயார்செய்து குறிப்பிட்ட மையக்கிராமங்களின் கிராமசேவை உத்தியோகத்தர் மூலமாக சம்பந்தப்பட்ட உதவி அரசாங்க அதிபர்களிடம் அவைகளை உடனடியாக கையளிக்கப்படல் வேண்டும். கிடைக்கப்பெறும் விண்ணப்பங்களைப் பிரதேச விவசாயக்குழுக் கூட்டத்தில் உதவி அரசாங்க அதிபர்களைத் தலைவராகக் கொண்ட குழுவால் பரிசீலனை செய்யப்பட்டு திட்டத்தெரிவு நடைமுறைகளுக்கிணங்க புள்ளியிடப்பட்டு உதவி அரசாங்க அதிபர்கள் மூலம் இவ்வலுவலகத்திற்கு அனுப்பப்பட்டு மாவட்டப் புள்ளியிடல் மேற்கொள்ளப்பட்டு மாவட்டத் தெரிவுக் குழுவுக்கு அனுப்பப்பட்டு இறுதித் தெரிவு மாவட்ட அரசாங்க அதிபர் தலைமையிலான மாவட்டத் தெரிவுக்குழுவால் இறுதியாக்கப்படும்.

**எந்திரி.ச.சு. சிவகுமார்**
**பிரதித் திட்டப்பணிப்பாளர்,**
**முல்லைத்தீவு மாவட்டம்.**

முல்லைத்தீவு மாவட்ட ..................................மையக்கிராமத்தின் பொது அமைப்புக்களில் ஒன்றான .................................. இன் நிர்வாக உறுப்பினர்களாகிய நாம் நியாப்-II திட்டத்தின் மூலம் பெறும் மையக்கிராமத்தின் அபிவிருத்திக்காக நிதியினைப் பெறுவதற்கு இத்தால் விண்ணப்பிக்கின்றோம்.

எமது விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்பட்டு நியாப்-II எமக்கு நிதியுதவி வழங்கும் பட்சத்தில் அத்திட்டத்தினைக் கீழ்வரும் நிபந்தனைகளுடன் ஏற்பதாக உறுதியுரை வழங்குகின்றோம்.

01. திட்டத்தினால் அனுமதிக்கப்படும் நன்மைகள், கிராமத்தில் வசிக்கின்ற தேவைப்படும் குடும்பங்களுக்குக் கிடைக்கச்செய்தல்.
02. திட்ட மூலதனத்தில் இம்மையக்கிராமத்திற்கான ஒதுக்கீட்டின் 7இலிருந்து 10 வீதமான வேலைகளைப் பயனாளிகள் பங்களிப்புச் செய்தல்.
03. திட்டத்தினால் ஏற்படுத்தித் தரப்படும் சொத்துக்களைத் தொடர்ந்து செயற்படுத்திப் பராமரித்துவருதலை உறுதிப்படுத்தல்.

நியாப்-II திட்டத்திலிருந்து நிதி பெறுவதற்காக மக்களின் சம்மதத்தைப் பெறுவதற்குப் பொதுக்கூட்டம் ஒன்று கூட்டி அதில் மேற்கூறிய நிபந்தனைகளுக்கமைவாக இத்திட்டத்தில் நிதிபெறுவதற்கு மக்களின் சம்மதத்தைப்பெற்று அவர்களின் கையொப்பங்கள் அடங்கிய கூட்ட [illegible]றிக்கையுடனும், கிராம சேவை உத்தியோகத்தரின் உறுதிப்பாட்டுடனும் இணைத்துள்ளோம். இந்தக் கிராமத்தை நியாப்-II எடுத்து அபிவிருத்தி செய்யுமாறு கீழ் கையொப்பம் இடப்பட்ட மேற்படி பொது அமைப்பின் நிர்வாகசபையின் முக்கிய உறுப்பினர்களாகிய நாங்கள் இவ்விண்ணப்பமூலம் கோருகின்றோம்.

| பெயர் | பதவி | கையொப்பம் |
|---|---|---|
| 1)........................................ | தலைவர் | .................................... |
| 2)........................................ | செயலாளர் | .................................... |
| 3)........................................ | பொருளாளர் | .................................... |

திகதி.......................

..........................................
**சங்கத்தின் பதிவு இலக்கமும்**
**இறப்பர் முத்திரையும்.**

## பொது அமைப்பால் பூரணப்படுத்தி விண்ணப்பத்துடன் சமர்ப்பிக்க வேண்டிய நியாப்-II மையக்கிராமத்தின் ஆரம்ப தகவல் அறிக்கை

### 1. மையக்கிராமத்தின் விபரங்கள்.

1.1) மையக்கிராமத்தின் பெயர்:-..........................................
1.2) கிராமசேவகர் பிரிவு:-..........................................
1.3) உதவி அரசாங்க அதிபர் பிரிவு:-..........................................
1.4) கமநல சேவை நிலையத்தின் பெயர்:-..........................................
1.5) மையக்கிராமத்தில் குளமிருப்பின் அதன் பெயர்:- ....................................
1.6) குடும்ப எண்ணிக்கை....................................
1.7) உள்ளூரில் இடம் பெயர்ந்த குடும்பங்களின் எண்ணிக்கை:................................
1.8) உள்ளூரில் இடம் பெயர்ந்து மீளவந்த குடும்பங்களின் எண்ணிக்கை:-..........................................
1.9) இத்திட்டம் நடைமுறைப் படுத்தப்பட்டால் வரஇருக்கும் இடம் பெயர்ந்த குடும்பங்களின் எண்ணிக்கை:-..........................................
1.10) ஏனைய பிரதேசங்களில் இடம் பெயர்ந்து இக்கிராமத்திற்கு வருகைதந்த குடும்பங்களின் எண்ணிக்கை: ..........................................
1.11) யுத்தத்தால் பாதிக்கப்பட்ட கட்டுமானங்கள்:
அ) வீதி இல்லை/ நடுத்தரம்/ முற்றாக
ஆ) பாடசாலை இல்லை/ நடுத்தரம்/ முற்றாக
இ) வீடுகள் இல்லை/ நடுத்தரம்/ முற்றாக
ஈ) ஏனைய கட்டுமானங்கள்
பெயர்
.......................இல்லை/ நடுத்தரம்/ முற்றாக
.......................இல்லை/ நடுத்தரம்/ முற்றாக

### 02. மையக்கிராம நிலப் பயன்பாடு.

2.1) நிரந்தரமாக விவசாயம் செய்யப்படும் மேட்டுநிலம் (ஏக்கர்) ........................................
2.2) குளத்திலிருந்து நீர்ப்பாசனம் பெறும் நிலம் (ஏக்கர்) ........................................
2.3) பாவனையில் இல்லாத நிலம் (ஏக்கர்) ........................................
2.4) பிறதேவைகளுக்கு (கட்டடம், கிணறுகட்ட) பயன்படுத்தக்கூடியகாணியுள்ளதா? ஆம்/இல்லை
2.5) வயற்காணி உள்ளவர்களின் எண்ணிக்கை.
அ). கிராமத்திலுள்ள உரிமையாளர்களின் எண்ணிக்கை:....................................
ஆ) கிராமத்திலில்லாத உரிமையாளர்களின் எண்ணிக்கை:....................................
2.6) விவசாயக்காணி உள்ளவர்களின் எண்ணிக்கை.
அ) கிராமத்திலுள்ள உரிமையாளர்களின் எண்ணிக்கை:-................................
ஆ) கிராமத்திலில்லாத உரிமையாளர்களின் எண்ணிக்கை:-................................
2.7) காணி உரிமை எதுவுமில்லாதவர்களின் எண்ணிக்கை

### 03. உட்கட்டுமான வசதிகள்.

3.1) பாடசாலை உள்ளதா? ஆம்/இல்லை
3.2) பொதுக்கிணறு உள்ளதா?ஆம்/இல்லை-ஆம் எனின் எத்தனை:..................................
3.3) பொதுமண்டபம் உள்ளதா? ஆம்/இல்லை
3.4) நீர்ப்பாசனக் குளம் உள்ளதா?ஆம்/இல்லை
3.5) சுகாதார நிலையம் உள்ளதா?ஆம்/இல்லை
3.6) பொதுச் சந்தை உள்ளதா?ஆம்/இல்லை
3.7) வீதிகளின் நிலைப்பாடு:-
நல்ல நிலையிலுள்ளது/ இடைத்தர நிலையிலுள்ளது/ மிகவும்மோசமானது/புதிதாகப் போடப்படல் வேண்டும்.

### 04. கிராம அமைவிடம் (K.M)

4.1) மாவட்ட அரசாங்க அதிபர் காரியலயத்திலிருந்து தூரம்:-
4.2) உதவி அரசாங்க அதிபர் காரியாலயத்திருந்து தூரம்:-
4.3) கிராம அலுவலர் அலுவலகத்திலிருந்து தூரம்:-
4.4) கிட்டவுள்ள அரச வைத்திய நிலையத்திலிருந்து தூரம்:-
4.5) கிட்டவுள்ள அரச பாடசாலையிலிருந்து தூரம்:-
4.6) கிட்டவுள்ள தபால் அலுவலகத்திலிருந்து தூரம்:-
4.7) நியாப் திட்டப் பணிமனையிலிருந்து தூரம்:-

### 05. கிராம மக்களின் பிரதான வருமானம்

5.1) மேட்டுப் பயிர்ச்செய்கையில் தங்கியுள்ள குடும்பங்களின் எண்ணிக்கை:-
5.2) நெற் பயிர்ச்செய்கையில் தங்கியுள்ள குடும்பங்களின் எண்ணிக்கை:-
5.3) ஏனைய வருமானத்தில் தங்கியுள்ள குடும்பங்களின் எண்ணிக்கை:-

### 06.வறுமையின் தன்மை

6.1) நிரந்தர வருமானமற்ற குடும்பங்களின் எண்ணிக்கை:-
6.2) யுத்தப்பாதிப்புக்களினால் பெண்களின் தலைமையிலிருக்கும் குடும்பங்களின் எண்ணிக்கை:-
6.3)யுத்தத்தால் பாதிக்கப்பட்ட ஊனமுற்ற அங்கத்தவர்களையுடைய குடும்பங்களின் எண்ணிக்கை.
6.4)யுத்தப்பாதிப்புக்களினால் அநாதையாகவுள்ளவர்களின் எண்ணிக்கை:-
6.5)கிராமத்தில் காணியற்ற தொழிலாளர்கள் எண்ணிக்கை:-
6.6) நிரந்தர வீ[illegible]டில்லாத குடும்பங்களின் எண்ணிக்கை:-

### 07.மிகவும் பிரயோசனமான கிராமத்திலுள்ள நீர்ப்பாசனத் திட்டத்தின்விபரங்கள் (இருப்பின் மட்டும்)

7.1) குளம்/அணைக்கட்டு/குட்டையின் பெயர்:-
7.2) அதற்குச் செல்லும் பாதையின் தன்மை:-
7.3) கிராமத்திலிருந்து அதன் தூரம்:-
7.4) அதன் தற்போதைய நிலைமை:-
[illegible] இயங்குகின்றதா :- ஆம்;/இல்லை
[illegible]டைப்பெடுத்துள்ளதா:-ஆம்/இல்லை
[illegible]டிய புனரமைப்புச் செய்யப்படல் வேண்டுமா :- ஆம்/இல்லை
7.5) பயிர் செய்யப்படும் காணியின் அளவு :-
1) பெரும்போகம் .................... 2)சிறுபோகம்........................
7.6) கடந்த ஆண்டு பயிர்[illegible]செய்திருப்பின் அதன் அளவு:
1) பெரும்போகம்.............. 2)சிறுபோகம் ..................................
7.7) 1.பயிர்ச்செய்கை நடவடிக்கையில் ஈடுபடும் குடும்ப எண்ணிக்கை:-
2.பயிர்ச்செய்கை நடவடிக்கைக்கு இத்திட்டத்திலிருந்து நீர்பெறும் குடும்பங்களின் எண்ணிக்கை:-
3. பயிர்ச்செய்கை நடவடிக்கைக்கு இத்திட்டத்தைவிட வேறுஇடத்திலிருந்து நீர்பெறும் குடும்ப எண்ணிக்கை:-
4. காணியற்ற, ஆனால் இக்குளத்திலிருந்து நீர்பெறும் குடும்பங்களின் எண்ணிக்கை:-

### 08. அபிவிருத்தித் திட்டங்கள்

8.1) இக்கிராமம் வேறு ஏதேனும் நிறுவனங்களுக்கூடாகத் தற்பொழுது அபிவிருத்தி செய்யப்படுகின்றதா?
.........................................................................
8.2) 10 வருடங்களுக்காக மேற்கொள்ளப்பட்ட அபிவிருத்திச் செயற்பாடுகள்:

| நிறுவனம் | செயற்பாடுகள் |
|---|---|
| | |

8.3) திட்டங்களை நடைமுறைப்படுத்துவதில் கிராமிய பொது நிறுவனங்களுக்கு அனுபவம் உண்டா? ஆம்/இல்லை
8.4) கொடுக்கப்பட்ட திட்டநடவடிக்கை இலக்கை குறிப்பிட்ட நாளில் முடிக்க தடைகள் உண்டா? ஆம்/இல்லை

### 09 வேறு தகவல்கள்

9.1) அழிவுகள் விஸ்தீரணம் (மொத்தமாக அல்லது குறைவாக).........................................................
9.2 நெற்செய்கை மேற்கொண்ட விஸ்தீரணம்:- ....................................
சென்ற சிறுபோகம்:-.................................... சென்ற காலபோகம்:-..................................................
9.3 சென்ற வருடம்செய்கை பண்ணப்படாவிடில், எவ்வளவு காலம் செய்கை பண்ணப்படாமல் கைவிடப் பட்டது:-..................................................
மாதம்,-..................................................
வருடம்:-....................................
9.4 மையக்கிராமத்திலிருந்து குளம் எவ்வளவு தூரம்:- ..................................................K.m
9.5 மையக்கிராமத்திலிருந்து குளத்துக்கு பாதை,பாதையின் வகை:-............................. தூரம்:-..........................................

### கிராம சேவையாளரது சிபார்சு

எனக்குத் தெரிந்த அளவிற்கு மேல்தரப்பட்ட தகவல்கள் யாவும் உண்மையானதும் சரியானது என சிபார்சு செய்கிறேன.

ஒப்பம்:-.................................. திகதி:-...........................

பிரதித்திட்டப் பணிப்பாளர்,
நியாப், முல்லைத்தீவு மாவட்டம்.


இவ்விண்ணப்பங்களுக்கு நியாப் II நடைமுறைகளுக்கிணங்க புள்ளியிடப்பட்டபோது இக்கிராமம் பெற்ற புள்ளிகள்................. ஆகும். இக்கிராமம் எமது தெரிவுக்குழுவின் நிரல்படுத்தலில்......... ஆம் இடத்தைப் பெற்றுள்ளது என்பதை உறுதிப்படுத்துகிறேன்.

திகதி:_______________________ பிரதேசசெயலாளர்:_______________________

(சி.10210)

## அமெரிக்கா ஓபன் டென்னிஸ்

# மவுரெஸ்மோ, செரீனா காலிறுதிக்கு; பெடரர், ஹெவிட், ரொடிக் அடுத்த சுற்றிற்கு



அமெரிக்க ஓபன் டென்னிஸ் போட்டியின் ஒற்றையர் பிரிவில் மவுரெஸ்மோ, செரீனா வில்லியம்ஸ் ஆகியோர் காலிறுதிக்குத் தகுதி பெற்றனர். கிராண்ட்ஸ்லாம் போட்டிகளில் ஒன்றான அமெரிக்க ஓபன் டென்னிஸ் போட்டி நியூயோர்க் நகரில் நடைபெற்று வருகின்றது.

இதன் பெண்கள் ஒற்றையர் பிரிவில் நாலாவது சுற்று ஆட்டம் ஒன்றில் எட்டாம் நிலை வீராங்கனை ஜெனீபர் கேப்ரியாட்டி (அமெரிக்கா), 12ஆம் நிலை வீராங்கனை அய் சுஜியமாவை (ஜப்பான்) எதிர்கொண்டார்.

இதில் கேப்ரியாட்டி 7-5, 6-2 என்ற நேர் செட்டில் வெற்றி பெற்று காலிறுதிக்கு முன்னேறினார்.



மற்றொரு ஆட்டத்தில் மூன்றாம் நிலை வீராங்கனை செரீனா வில்லியம்ஸ் (அமெரிக்கா) 6-4, 6-2 என்ற நேர் செட்டில் பட்டி சின்டொரை (சுவிட்சர்லாந்து) தோற்கடித்து காலிறுத்திக்குள் நுழைந்தார்.

இன்னொரு ஆட்டத்தில் இரண்டாம் நிலை வீராங்கனை அமெலி மவுரெஸ்மோ (பிரான்ஸ்) 6-4, 6-2 என்ற நேர் செட்டில் 16ஆம் நிலை வீராங்கனை பிரான்செஸ்காவை (இத்தாலி) தோற்கடித்துக் காலிறுதிக்கு முன்னேறினார்.

மற்றொரு ஆட்டத்தில் 6ஆம் நிலை வீராங்கனை எலீனா டெமண்டிவா (ரஷ்யா) 1-6, 6-4, 6-3 என்ற செட் கணக்கில் சக நாட்டு வீராங்கனை வெரா ஜூனா ரெவைத் தோற்கடித்து காலிறுதிக்குத் தகுதி பெற்றார்.

காலிறுதியில் செரீனா வில்லியம்சும் - கேப்ரியாட்டியும், மவுரெஸ்மோ - எலீனா டெமன்டிவாவும் மோதுகிறார்கள்.



ஆண்கள் ஒற்றையர் பிரிவில் 3ஆம் சுற்று ஆட்டம் ஒன்றில் இரண்டாம் நிலை வீரர் ஆன்டி ரோடிக் (அமெரிக்கா) 6-1, 6-3, 6-3 என்ற செட் கணக்கில் குல்லெர்மோ கனாஸ்சை (ஆர்ஜன்ரீனா) தோற்கடித்து நான்காவது சுற்றிற்கு முன்னேறினார்.

மற்றும் லெய்டன் ஹெவிட் (அவுஸ்திரேலியா), டாமி ஹாஸ் (ஜேர்மன்), ஜோஷிம் ஜோகன் சன் (சுவீடன்), கரோல் பெக் (ரஷ்யா), மைக்கேல் லாத்ரா (பிரான்ஸ்), டாமி ராப்ரெடோ (ஸ்பெயின்), டாமஸ் பெர்ட்ச் (செக்குடியரசு) ஆகி யோா 3ஆவது சுற்றில் வெற்றி பெற்றனர்.

ஆண்கள் இரட்டையர் பிரிவில் 3ஆவது சுற்று ஆட்டம் ஒன்றில் லியாண்டர் பெயஸ் (இந்தியா) - டேவில் ரிகில் (செக்குடியரசு) ஜோடி 2-6, 7-5, 6-4 என்ற செட் கணக்கில் ஜோனஸ் பிஜோர்க்மன் (சுவீடன்) டுட் உட்பிரிட்ஜ் (அவுஸ்திரேலியா) ஜோடியை வீழ்த்திக் காலிறுதிக்கு முன்னேறியது.

கலப்பு இரட்டையர் ஆட்டம் 2ஆவது சுற்றில் மார்ட்டினா நவரத்திலோவா (அமெரிக்கா), லியாண்டர் பெயஸ் (இந்தியா) ஜோடி 6-3, 6-4 என்ற நேர் செட்டில் எல் காலென்ஸ் (பெல்ஜியம்), மார்டின் (செக்குடியரசு) ஜோடியைத் தோற்கடித்து காலிறுதிக்குத் தகுதி பெற்றது.

மற்றொரு ஆட்டத்தில் லிசா ரேமண்ட் (அமெரிக்கா) - மகேஸ் பூபதி (இந்தியா) இரண்டாவது சுற்றில் தோல்வி கண்டது. அலிசியா மோலிக் (அவுஸ்திரேலியா) டுட் உட்பிரிட்ஜ் (அவுஸ்திரேலியா) ஜோடி 7-6,(7-1) 7-6 (7-3) என்ற நேர் செட்டில்சா ரேமண்ட் - மகேஸ் பூபதி ஜோடியை வீழ்த்தியது.

## சம்பியன்ஸ் ஹொக்கி இந்தியாவிற்கு வாய்ப்பு?

சம்பியன்ஸ் கொக்கித்தொடரில் பங்கேற்கும் வாய்ப்பு இந்தியாவைத் தேடி வருகிறது. பாகிஸ்தானில் உள்ள லாகூரில் வரும் டிசம்பரில் (4-12) சம்பியன்ஸ் ஹொக்கித் தொடர் நடக்கவுள்ளது. இதில் நடப்புச் சம்பியன் நெதர்லாந்து உலக சம்பியன் ஜேர்மனி, ஸ்பெயின் ஒலிம்பிக் சம்பியன் அவுஸ்திரேலியா, நியூசிலாந்து மற்றும் போட்டியை நடத்தும் நாடு என்ற அடிப்படையில் பாகிஸ்தான் ஆகிய ஆறு அணிகள் கலந்துகொள்கின்றன. எதென்ஸ் ஒலிம்பிக்கில் ஏழாவது இடம்பெற்ற இந்தியா இத்தொடரில் பங்கேற்கும் வாய்ப்பைத் தவறவிட்டது. ஆனாலும் பாகிஸ்தானில் நிலவும் தீவிரவாத அச்சுறுத்தல் காரணமாக அவுஸ்திரேலியா, நியூசிலாந்து அணிகள் போட்டியைப் புறக்கணிக்க முடிவு செய்துள்ளதாகத் தெரிகிறது. இந்த இரு அணிகளும் வெளியேறும் பட்சத்தில் இந்தியாவுக்கு வாய்ப்புக் கிடைக்கலாம்.





அவுஸ்திரேலியா அரசு பாகிஸ்தானுக்கு பயணம் செய்வதைத் தவிர்க்கும் படி கேட்டுக்கொண்டுள்ளது. இதேபோல் நியூசிலாந்து வெளியுறவுத் துறை அமைச்சகமும் பயங்கரவாதிகள் நடமாட்டம் மிகுந்த பாகிஸ்தானுக்குச் செல்ல வேண்டாம் என்று மக்களை எச்சரித்துள்ளது. இந்தச் சூழலில் இரு அணிகளும் சம்பியன்ஸ் ஹொக்கியில் பங்கேற்பது கடினமே.



உலகக்கிண்ணகால்பந்தாட்டத் தகுதி காண்போட்டியில் பங்கேற்கும் கொலம்பியாவின் ஒஸ்கா டயனா, சிலியின் றொட்றிகோ வலன்சிலா ஆகியோர்.

## அவுஸ். அணியுடனான டெஸ்டிலும் டெண்டுல்கர் பங்கேற்பது சந்தேகம்



இந்திய நட்சத்திரத் துடுப்பாட்ட வீரர் சச்சின் டெண்டுல்கர் தொடர்ந்து வைத்திய சிகிச்சைக்கு உட்பட வேண்டிய சூழ்நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளார்.


ஏற்கனவே ஐசிசி மினி உலகக் கிண்ணப் போட்டியில் விளையாட மாட்டார் என அறிவிக்கப்பட்டுள்ள நிலையில் அவரது உபாதை மோசமானதாக உள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. அவுஸ்திரேலிய அணி பங்குபற்றும் இந்திய அணியுடனான டெஸ்ட் போட்டியிலாவது விளையாடுவாரா? என்ற சந்தேகத்தை ஏற்படுத்தியுள்ளது.

உபாதை காரணமாக அடிக்கடி ஓய்வெடுத்து வரும் டெண்டுல்கர் அவுஸ்திரேலியாவுடனான டெஸ்ட் தொடரிலாவது பங்குபற்றுவது இன்று வரை கேள்விக்குரிய விடயமாகவே உள்ளது.

## அவுஸ். பெண்கள் கிரிக்கெட் அணி இந்தியாவிற்குச் சுற்றுப் பயணம்

அவுஸ்திரேலியப் பெண்கள் கிரிக்கெட் அணி ஏழு ஒருநாள் போட்டிகளில் கலந்து கொள்ளும் பொருட்டு டிசம்பர் மாதம் இந்தியா செல்கிறது. பெண்கள் உலகக் கோப்பைக் கிரிக்கெட் போட்டி அடுத்த ஆண்டு (2005) மார்ச் மாதம் தென்னாபிரிக்காவில் நடைபெறவுள்ளது. இதற்கு இந்திய அணி தயாராகும் பொருட்டு வலுவான அவுஸ்திரேலியாவுடன் மோதுகிறது. ஒரு போட்டி சென்னையில் நடைபெறவுள்ளது.

## இந்தியாவை வெற்றிகொள்ள பாக். தயார் ஐ.சி.சி. சம்பியன் போட்டியில் மொயின் கான்



கிரிக்கெட் விளையாட்டில் தங்களுடைய பரம வைரியான இந்தியாவைத் தொடர்ந்து 3 ஆவது ஆட்டத்தில் வெல்லத் தயாராக உள்ளதாகவும் இந்த வெற்றிப் பயணத்தை இங்கிலாந்தில் வரும் 10ஆம் திகதி தொடங்கும் ஐ.சி.சி சம்பியன்ஸ் கோப்பைப் போட்டியில் தொடர தங்களுடைய வீரர்கள் தயாராக உள்ளதாக பாகிஸ்தான் கிரிக்கெட் அணியின் முன்னாள் அணித்தலைவரும், விக்கெட் காப்பாளருமான மொயின்கான் கூறியுள்ளார்.

சமீபத்தில் நடைபெற்ற ஆசியக் கோப்பைப் போட்டியில் இந்தியாவைப் பாகிஸ்தான் 59 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வென்றது. அதைத் தொடர்ந்து நெதர்லாந்தில் நடைபெற்ற முத்தரப்புக் கிரிக்கெட் போட்டியில் 66 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வென்றது. ஐ.சி.சி. சம்பியன் கோப்பைப் போட்டியில் இரு நாடுகளும் செப்ரெம்பர் 19ஆம் திகதி மோதுகின்றன. கடந்த இரண்டு ஆட்டங்களில் நாங்கள் ஆதிக்கம செலுத்தினோம். அதைத் தொடருவோம் என்ற நம்பிக்கை உள்ளது என்றார் மொயின் கான் இங்கு பாகிஸ் தானியர்கள் அதிக அளவில் வசித்து வருகின்றனர். போட்டியின்போது அவர்களுடைய ஊக்கத்துடன் இந்தியாவை வெல்வோம். இருப்பினும் இரு நாடுகளுக்கும் இது மிகவும் முக்கியமான போட்டியாக அமையக்கூடும் என்றார் மொயின்கான்.

கடைசியாக அவுஸ்திரேலியாவுக்கு எதிரான ஆட்டத்தில் பாகிஸ்தான் தோல்வியடைந்தது. ஐ.சி.சி.சம்பியன் போட்டியில் இறுதிக்கு நுழைந்தால் மட்டுமே மீண்டும் அவுஸ்திரேலியாவை அது சந்திக்க நேரிடும். அவுஸ்திரேலியாவுக்கு எதிரான ஆட்டத்தில் கிட்டத்தட்ட நாங்கள் வென்றோம். 10 ஓட்டங்களில் தோல்வியடைந்தோம். அவுஸ்திரேலியாவை வெல்ல முடியுமானால் உலகின் எந்த அணியையும் வெல்லமுடியும் என்று பாகிஸ்தான் வேகப்பந்து வீச்சாளர் ஷோயப் அக்தர் நம்பிக்கையுடன் கூறியுள்ளார்.

## இந்திய கிரிக்கெட் சபைக்கு எதிராக ஸ்டார் ஸ்போர்ட்ஸ் நீதிமன்றில் வழக்கு

அடுத்த 4ஆண்டுகள் இந்தியாவில் நடைபெறும் கிரிக்கெட் போட்டிகளை தொலைக்காட்சியில் ஒளிபரப்புவதற்கான உரிமையை ஜீ தொலைக்காட்சிக்கு இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டு வாரியம் வழங்கியதை எதிர்த்து ஈ.எஸ்.பி.என்-ஸ்டார் ஸ்போர்ட்ஸ் சேனல் மும்பை உயர்நீதிமன்றத்தில் வழக்குத் தொடர்ந்துள்ளது.

## உபாதை வீரர்கள் வரிசையில் பாகிஸ்தானின் சகீர் அகமட்

கிரிக்கெட்டில் உபாதைக்கு உள்ளாகி வரும் வீரர்களின் வரிசையில் மற்றுமொருவர் நுழைந்துள்ளார். பாகிஸ்தானின் சகீர் அகமட் உபாதை காரணமாக ஆறு வாரங்களுக்கு விளையாட முடியாத சூழ்நிலைக்குள்ளாகியுள்ளார்.

முளங்கால் உபாதை காரணமாக இந்த நிலை ஏற்பட்டுள்ளது.

ஏற்கனவே மற்றுமொரு இளம் வீரர் உமர்குல்லும் உபாதை காரணமாக ஒரு வருடத்துக்கு விளையாட முடியாத நிலை ஏற்பட்டது. இந்த நிலையில் மினி உலகக் கிண்ணப்போட்டியில் அக்தர் மற்றும் முகமட் சாமி ஆகியோரை வைத்துச் சமாளிக்க வேண்டிய நிலை பாகிஸ்தானுக்கு ஏற்பட்டுள்ளது.

## சமாதான காலப்பந்து இறுதிப் போட்டி மன்னார் சபேரியார் கல்லூரி சம்பியன்

யாழ்.வட்டுக்கோட்டை கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற சமாதான கால்பந்துப் போட்டியில் மன்னார் புனித சபேரியார் ஆண்கள் கல்லூரி கால்பந்து அணி வெற்றி பெற்றுள்ளது. இறுதிப்போட்டியில் யாழ்ப்பாணம் சென்பற்றிக்ஸ் கல்லூரி அணியை எதிர்த்து ஆடிய சபேரியார் கல்லூரி அணி 5-4 என்ற கோல் எண் ணிக்கையில் வெற்றி பெற்றது. இப்போட்டியின் சிறப்பாட்டக்காராக சபே ரியார் கல்லூரி அணி வீரர் கே.நிசாந்தனும் சிறந்த கோல்காப் பாளராக யாழ்.சென்பற்றிக்ஸ் வீரர் S.M தினெக்ஸ் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர். மேற்படி போட்டி கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது. (மி)

## இராமநாதபுரம் ம.வி.க்கு 3ஆம் இடம்


2004ஆம் ஆண்டு அகில இலங்கைப் பாடசாலைகளுக்கிடையேயான உடற்பயிற்சிப் போட்டி 04.09.2004 ஆம் திகதி வத்தளை புனித அந்தோனியார் கல்லூரியில் கல்வியமைச்சினால் நடத்தப்பட்டது. இப்போட்டியிலே கிளி.இராமநாதபுரம் மேற்கு அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலையிலிருந்து பங்குபற்றிய 30 பேர் கொண்ட பெண்கள் அணியினர் 3ஆம் இடத்தைப் பெற்று வெண்கலப் பதக்கங்களைப் பெற்றுக்கொண்டனர்.

கிளி.இராமநாதபுரம் மேற்கு பாடசாலை கடந்த மூன்று வருடங்களாகத் தேசிய மட்ட உடற்பயிற்சிப் போட்டியில் பங்குபற்றி 2002ஆம் ஆண்டு 1ஆம் இடத்தையும், 2003ஆம் ஆண்டு 5 ஆம் இடத்தையும், 2004ஆம் ஆண்டு 3ம் இடத்தையும் பெற்று தமிழ் மாணவிகளுக்கு பெருமை தேடிக் கொடுத்துள்ளனர். (14)

## வடக்கு – கிழக்கு மகளிர் அணிக்கு தேசியப் போட்டியில் மகத்தான வெற்றி

30 ஆவது தேசிய விளையாட்டு விழா நேற்றுப் பதுளை வின்சன்ட் டயஸ் மைதானத்தில் ஆரம்பமானது. ஏற்கனவே முதற் கட்டமாக இடம்பெற்ற வடக்கு கிழக்கு மாகாண மகளிர் அணிக்கும் தென் மாகாண மகளிர் அணிக்கும் இடையிலான கால்பந்தாட்டப் போட்டியில் வடக்குகிழக்கு மாகாண அணி 14-0 என்ற கோல் அடிப்படையில் வெற்றிபெற்றது.

இதில் அலைமகள் 6 கோல்களையும், தர்சினி 4 கோல்களையும் பெற்றுக்கொடுத்தனர். இதன் அடிப்படையில் அந்த அணி அரை இறுதிபோட்டிக்குத் தெரிவாகியுள்ளது. ஊவா மாகாண மகளிர் அணிக்கும் சப்ரகமுவ அணிக்கும் இடையிலான போட்டியில் ஊவா மாகாண அணி 16-0 என்ற அடிப்படையில் வெற்றிபெற்றது. வடமேல் மாகாண அணிக்கும் வட மத்திய மாகாண அணிக்கும் இடையிலான கால்பந்து போட்டியில் வடமேல் மாகாண மகளிர் அணி 3-0 என்ற அடிப்படையில் வெற்றிபெற்றது. மற்றுமொரு போட்டியில் மேல் மாகாண அணி மத்திய மாகாண அணியை 4-2 என்ற கோல் அடிப்படையில் வெற்றி பெற்றது. (32)



## சிந்தனைக்கு

பழையன கழிந்து புதியன சேர்ந்து செழுமைப்படும் கலை, கலாசாரம், பண்பாடு எமது இனத்திற்கும் பெருமை சேர்க்கும்; எமது மக்களின் மனவுலகில் ஒரு புரட்சிகரமான விழிப்புணர்வைத் தோற்றுவிக்கும்.

தமிழீழ தேசியத் தலைவர்.

ஈழநாதம்
மக்கள் நாளிதழ்
யாழ். சாலை, கிளிநொச்சி. 08-09-2004
தொலைபேசி 060-2213244
தொலைநகல் 021-2283948
மின் அஞ்சல் Daily@eezhanatham.com

# 13 வயதுசிறுமி மீது பாலியல் வல்லுறவு குற்றவாளிக்கு 15 வருடச்சிறை!

## -உதவி புரிந்த இரு ஊர்காவற்படையினருக்கும்தண்டனை

(செட்டிகுளம்)

சிறுமி ஒருவரைப் பாலியல் பாலாத்காரம் புரிந்த நபர் ஒருவருக்கு வவுனியா மேல் நீதிமன்றம நேற்று 15 வருட கடூழிய சிறைத் தண்டனை விதித்துள்ளது அதனுடன் தொடர்புடைய இரண்டு ஊர்காவற் படையாளிகளுக்கு மூன்று வருட சிறைத்தண்டனை விதித்துள்ளது 1999 ஆம் ஆண்டு மார்ச்மாதம் வவுனியாகச்சக்கொடிய என்ற இடத்தில் 13 வயதுடைய சிறுமி ஒருவரைக் கடத்திச் சென்று பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தியமை தொடர்பாக வேலாதேகே ஜெயசிங்க, லொக்குபத்திரனலாகே தயானந்த அல்லது சனத், லொக்குபத்திரனலாகே அனுஸா குமாரி என்ற மூன்று நபர்களுக்கு எதிராக வழக்குப் பதிவு செய்யப்பட்டு விசாரணைகள் நடைபெற்று வந்தது. இம் மூவரும் குற்றவாளிகளாக இனம் காணப்பட்டதை அடுத்து நேற்று வவுனியா மேல் நீதிமன்ற நீதவான் ஜேர்மையா விஸ்வநாதன் தீர்ப்பு வழங்கினார் ஆட்கடத்தலுக்கு மூன்று பேருக்கும் மூன்று வருட கடூழிய சிறைத்தண்டனையும் தலா இரண்டாயிரம் தண்டப்பணமும் செலுத்த வேண்டும் என்றும் பணம் செலுத்தாத பட்சத்தில் மூன்றுமாத சிறைத்தண்டனை அனுபவிக்க வேண்டும், இரண்டாவது எதிரியான லொக்குபத்திரனலாகே தயானந்த அல்லது சனத், என்பவருக்கு சிறுமியைப் பாலியல்வல்லுறவுக்கு உட்படுத் தியமைக்காக 12 வருட கடூழிய சிறைத்தண்டனையும் ஐந்தாயிரம் தண்டப்பணமும் செலுத்தவேண்டும் என்றும் அவ்வாறு பணம் செலுத்தத் தவறும்பட்சத்தில் ஆறு மாத சிறைத்தண்டனையும் அனுபவிக்க வேண்டும் என்றும் பாதிக்கப்பட்ட சிறுமிக்கு 10 ஆயிரம்ரூபா நட்ட ஈடுகொடுக்க வேண்டும். பணம் செலுத்தாத பட்சத்தில் ஒருவருட கடூழிய சிறைத்தண்டனை அனுபவிக்க வேண்டும் என்றும் வவுனியாமேல் நீதிமன்ற நீதவான் ஜேர்மையா விஸ்வநாதன் தீர்ப்பு வழங்கியுள்ளார்.

1999 ஆண்டு மார்ச் மாதம் 18ஆம் திகதி மாலை ஆறு மணி போல ஜயதிலகவும் அவரின் மனைவியும் மேற்படி சிறுமியின் வீட்டுக்கு வந்து தயாநந்த கிருமி நாசினி குடித்து விட்டதாகக் கூறி அழைத்துக் கொண்டு மூடப்பட்ட முச்சக்கர வண்டியில் சென்று உள்ளனர் கச்சக் கொடிக்குக் கொண்டு சென்றுள்ளதாகவும் சிறுமிமீது பாலியல் வல்லுறவு மேற்கொண்ட பின்னர் அந்த பெண்ணை அனுராதபுர மாவட்டத்தில் உள்ள திரப்பனை என்ற இடத் திற்குக் கொண்டு சென்று மறைதது வைத்துள்ளனர் எனவும் தெரிவிக்கப்படுகிறது பிள்ளையைக் காணவில்லை என்று சிறுமியின் தாயார் 19.03.1999 வவுனியா பொலிஸ் நிலையத்தில் முறைபாடு செய்துள்ளார் இதன் பின்னர் திரப்பனை பொலிசார் மேற்படி சிறுமி அங்கு இருப்பதாக வவுனியாப் பொலிசாருக்கு தகவல் கொடுத்ததன் பின்னர் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டு விசாரணைகள் இடம் பெற்றமை குறிப்பிடத்தக்கது தயானந்த என்பவரின் சகோதரியும் கணவருமே இதற்கு உடந்தையாக இருந்தார்கள் என்பதும் அவ் இருவரும் ஊர்காவற்படையை சேர்ந்தவர்கள் என்பதும் குறிப்பிடத்தக்கது தயானந்தவுக்கும் சிறுமிக்கும் காதல்தொடர்பு இருந்ததாகக் கூறிக் கடிதங்கள் நீதிமன்றில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது எனினும் இது ஆதாரபூர்வமாக நிரூபிக்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது அப்படிக் காதல்தொடர்பு இருந்திருந்தாலும் 16 வயதுக்கு உட்பட்ட சிறுமியை விரும்பியோ அல்லது விரும்பாமலோ உறவு கொண்டால் அது சட்டத்தின் முன் பாலாக்காரமாகவே கணிக்கப்படும் என்பதும் குறிப்பிடத்தக்கது (21)

## அற நனைந்தால் ......?

"தேர்தல் வாக்குறுதிகளை நிறைவேற்ற முடியாது போனால் அதற்காக நாட்டை யுத்தத்தை நோக்கி இழுத்துச் செல்ல வேண்டாம்"என்று எதிர்க்கட்சித்தலைவர் ரணில் விக்கிரமசிங்க சனாதிபதி சந்திரிகாவிடம் விடுத்துள்ள வேண்டுகோளானது வழமையாக ஆளும் தரப்பினர் மீது எதிர்க்கட்சியினர் சுமத்தும் குற்றச்சாட்டுப் போன்ற தொன்றல்ல. எதிர்க்கட்சித் தலைவரின் எச்சரிக்கையானது. நாட்டின் களநிலவரத்தின் வெளிப்பாடு என்றே கொள்ளத்தக்கது.

சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க அண்மையில் விடுதலைப் புலிகளுடன் விரைவில் பேச்சுவார்த்தைகள் ஆரம்பிக்கப்படும்; விடுதலைப்புலிகளுடன் பேச்சுவார்த்தைகள் ஆரம்பிக்கப்பட முன்னர் ஐ.தே.கட்சி உட்பட அனைத்துக் கட்சிகளுடனும் கலந்துரையாடப்படுமெனக் கூறிக்கொண்டிருப்பினும் சமாதான முயற்சிகளில் முன்னேற்றம் காண்பதற்கான சூழ்நிலை உருவாகியுள்ளதாகவோ, வளர்ச்சி கண்டு வருவதாகவோ இல்லை.

மாறாக அரசாங்கத்தரப்பில் நெருக்கடிகள் வளர்ச்சி கண்டு வருவதாகவும் அரசாங்கம் செயற்பட முடியாதவகையில் ஆளும் கூட் டணிக்குள் முரண்பாடுகள் தீவிரமடைந்து வருவதாகவுமே சூழ்நிலையுள்ளது. அதாவது ஆளும் கூட்டணிக்குள் ஏற்பட்டுள்ள முரண்பாடு மற்றும் மக்களுக்கு வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்ற முடியாமை காரணமாக அரசாங்கம் பெரும் சவாலைச் சந்தித்து நிற்கின்றது.

எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க குறிப்பிட்டது போன்று நிறைவேற்றமுடியாத வாக்குறுதிகளை ஆளும் தரப்பினர் மக்களுக்கு வழங்கினர் என்பது ஏற்புடையதொன்றே. ஐ.ம.சு முன்னணி வழங்கிய தேர்தல் வாக்குறுதிகள் ஓர் அரசு நல்லநிலையில் செயற்படும் போது கூட நிறைவு செய்வது கடினமானதொன்றாகும்.

மாறாக சிறிலங்கா அரசோ பெரும் பொருளாதார நெருக்கடியில் ஏற்கனவே சிக்கிப் போயுள்ளது. அதிலிருந்து விடுபடுவதற்கென ஐ.தே. கட்சி பகீரதப்பிரயத்தனங்களைச் செய்து கொண்டிருந்த வேளையில் அதன்அரசாங்கமும் கலைக்கப்பட்டது. இதனை அடுதது நடந்த தேர்தலில் ஐ.ம.சு முன்னணியால் பெரும் வாக்குறுதிகளும் வழங்கப்பட்டன.அதாவது மோசமான பொருளாதார நிலையில் இருந்து கொண்டு சீரானதும், செழிப்பானதுமானதொரு பொருளாதாரத்தில் கூட நிறைவு செய்வது கடினமான வாக்குறுதிகளை எவ்வாறு நிறைவேற்றமுடியும்?

அடுத்ததாக சர்வதேச சந்தையில் எரிபொருளின் விலை ஏற்றமும் நாட்டைவெகுவாகப் பாதித்துள்ளது. இது கட்டுக்கடங்காத வாழ்க்கைச் செலவு அதிகரிப்பை ஏற்படுத்துவதாக மாறியுள்ளது.அதாவது வாழ்க்கைச் செலவு கட்டுப்படுத்தப்படும். சம்பள உயர்வு வழங்கப்படும் என்ற வாக்குறுதிகளுக்கு எதிர்மறையான நிகழ்வுகளே இடம்பெறுபவையாகவுள்ளன.

இவை ஒருபுறமிருக்க ஆளும் ஐ.ம.சு முன்னணிக்குள் அதிகரித்து வரும் கருத்துவேறுபாடுகளும், சமாதானப் பேச்சுவார்த்தைகள் தொடர்பாக அக்கூட்டணிக்குள் நிலவும் முரண்பாடுகளும், அரசாங்கத்தைப் பெரிதும் பலவீனப்படுத்துவதாகியுள்ளது. அதாவது கூட்டணியில் முக்கிய பங்காளியான ஜே.வி.பியின் நிலைப்பாடானது சமாதானப் பேச்சுவார்த்தைக்கு மட்டுமல்ல யுத்தநிறுத்தத்திற்கும் எதிராகவேயுள்ளது. அத்தோடு சர்வதேச நிதிநிறுவனங்களின் உதவிகள் தேவையில்லையெனக் கோஷமிடும் ஜே.வி.பி தனது தேர்தல் வாக்குறுதிகளை நிறைவேற்ற வழி என்ன? என்பதை வெளிப்படுத்துவதாக இல்லை.

மேலும் ஆளும் கூட்டணியின் பிரதான கட்சியான சுதந்திரக் கட்சிக்குள் எழுந்துள்ள முரண்பாடுகள் அக்கட்சியில் பாரிய பிளவு ஏற்படுவதில் முடியலாம் என்ற அளவில் உள்ளது. சுதந்திரக் கட்சிக்குள்ளான முரண்பாட்டிற்கு கட்சியின் தலைமைத்துவப் போட்டி ஜே.வி.பி யுடனான உடன்பாட்டினால் சுதந்திரக்கட்சியில் ஒரு தரப்பினர் கொண்டுள்ள அதிருப்தி போன்றவையும் சனாதிபதி சந்திரிகாவின் நிலைப்பாட்டிற்கு மாறாக சுதந்திரக்கட்சியில் ஒரு தரப்பினர் செயற்படுவதும் அரசாங்கத்தைப் பெரிதும் பலவீனப்படுத்துவதாயுள்ளது.

இந்நிலையில் அரசாங்கம் நாட்டில் கூர்மைபெற்ற இனப்பிரச்சினையையும், பொருளாதார நெருக்கடியையும் தீர்த்தல் என்பது எந்த வகையில் சாத்தியமாகும்?ஆனால், இப்பிரச்சினைகளுக்குத் தீர்வுகாணாது போனால் அரசாங்கத்தால் நாட்டை நிர்வகிக்க முடியாது போகலாம்.அதாவது பெரும் சவால்களை மக்களிடம் இருந்து அரசாங்கம் எதிர்நோக்க வேண்டியிருக்கும். இது அரசாங்கத்தைக் கவிழச்செய்யும் நிலைவரை வளர்ச்சி காணலாம்.

ஆனால் அரசாங்கம் இவற்றிலிருந்து விடுபட அதாவது ஆளும் கூட்டணிக்குள் எழுந்துள்ள முரண்பாட்டை மழுங்கடிக்கவும், மக்களிடமிருந்து எழும்பக்கூடிய எதிர்ப்பைத் திசைதிருப்பி விடவும், யுத்தத்தை ஆரம்பித்தலே அரசாங்கத்திற்கு கைகொடுக்கக் கூடியதொன்றாக இருக்கும். இத்தகையதொரு சூழ்நிலை உருவாகி வருவதை எதிர்க்கட்சித்தலைவர் ரணில் உணர்ந்து கொண்டதன் வெளிப்பாடே தேர்தல் வாக்குறுதிகளை நிறைவேற்றாது போனாலும், யுத்தத்திற்குச் செல்லவேண்டாம் என்ற கோரிக்கையாகும். ஆனால் அற நனைந்தவனுக்கு கூதல் என்ன? குளிர் என்ன? என்ற நிலை சனாதிபதி சந்திரிகாவிற்கு ஏற்படுமானால் யுத்தம் ஒன்றுக்குச் செல்லவும் அவர் தயங்கமாட்டார். என்பதே அவரின் கடந்தகால நடவடிக்கைகளின் அடிப்படையிலான மதிப்பீடாகும்.

## தனது அமைச்சுக்களை இலங்கை தொழிலாளர் காங்கிரஸிக்கு விட்டுக்கொடுக்க தினேஷ் மறுப்பு

(கொழும்பு)

அரசாங்கத்தில் இணைந்துள்ள இலங்கை தொழிலாளர் காங்கிரஸுக்கு நகர அபிவிருத்தி மற்றும் நீர் முகாமைத்துவ அமைச்சை விட்டுக்கொடுக்க அமைச்சர் தினேஸ் குணவர்த்தன மறுத்துள்ளார். இதனையடுத்து நேற்று முன்தினம் கூடிய ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் அமைச்சர்களுடனான சந்திப்பின் போது சனாதிபதி அவருக்கு போக்குவரத்துத் துறை அமைச்சை வழங்குவதற்கான ஆலோசனையைத் தெரிவித்தார். இதனை தினேஸ் குணவர்த்தன ஏற்றுக் கொண்டதை அடுத்துப் போக்குவரத்து துறைஅமைச்சரை சனாதிபதி பேச்சுவார்த் தைக்கு அழைத்திருந்தார். (32)

## பெயர்ப் பட்டியலில் இல்லாதோர் கவனத்திற்கு

(அலுவலக செய்தியாளர்)

கிளிநொச்சி மாவட்டத்தைச் சேர்ந்த வேலையற்றபட்ட தாரிகளுக்குள் நியமனம்வழங்கப் பெற்றுள்ளவர்களின் பெயர் விபரங்கள் அண்மையில் பத்திரிகையில் வெளிவந்துள்ளது.பத்திரிகையில் பெயர் விபரம் வெளிவராதுள்ள கிளி. மாவட்டப் பட்டதாரிகள் இருப்பின் அவர்கள் தமது விபரங்களுடன் கிளிநொச்சி மாவட்டச்செயலகத்துடன் தொடர்பு கொள்ளும் வண்ணம் கிளி.மாவட்ட அரசஅதிபர் திஇராசநாயகம் வேண்டுகை விடுததுள்ளார் (சோ,கு)

- இராணுவத்தின் மீது தாக்குதல் நடத்தியதாக இளைஞனுக்கு -

# பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழான தீர்ப்பு தவறென ஐ.நா.ம.உ.த.தெரிவிப்பு

இராணுவத்தின் மீது தாக்குதல் நடத்திய குற்றச்சாட்டின் பேரில் இலங்கை நீதிமன்றம் தமிழர் ஒருவருக்கு வழங்கிய தண்டனை தவறானது என ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஸ்தாபனம் தெரிவித்துள்ளது. மட்டக்களப்பைச் சேர்ந்த நல்லரத்தினம் சிங்கராஜா என்பவருக்கே இந்தத் தண்டனையை இலங்கை நீதிமன்றம் வழங்கியுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது 1992ஆம் ஆண்டு இவர் இராணுவத்திற்கு எதிராகத் தாக்குதலை நடத்தினார். எனக் குற்றம் சுமத்தப்பட்டு கொழும்பு மேல் நீதிமன்றம் இவருக்கு 50வருடகால சிறைத்தண்டனையை வழங்கியது. இதனை எதிர்த்து அவர் உயர் நீதி மன்றத்தில் தாக்கல் செய்த வழக்கின் தீர்ப்பில் சிறைத் தண்டனை 35 வருடங்களாக குறைந்தது. இந்தநிலையில் விடயம் ஐக்கிய நாடுகள் அமையத்தின் மனித உரிமைகள் நிறுவனத்தின் கவனத்திற்கு கொண்டுவரப்பட் டதை அடுத்து இந்த தீர்ப்புகள் தவறானவை என அந்நிறுவனம் கூறியுள்ளது.(32)

# வவுனியாவில் தொடர் கொள்ளைகளில் ஈடுபட்ட இரு குழுக்களின் தலைவர்களுக்கு 32வருடச்சிறை

(செட்டிகுளம்)

வவுனியாவில் இடம்பெற்று வந்த கொள்ளைகளுடன் தொடர்புபட்டு வந்த இரண்டு கொள்ளைக் குழுக்களின் தலைவர்களுக்கு 32 வருட சிறை தண்டனையும் 60 ஆயிரம் தண்டப் பணமும் விதித்து வவுனியா மாவட்ட நீதவான் எம்.இளஞ்செழியன் தீர்ப்பளித்துள்ளார். கடந்த வருடம் ஆகஸ்ட் மாதம்முதல் இந்த வருடம் மார்ச்மாதம் வரையில் வவுனியாவில் இடம்பெற்ற 60 வீடுடைப்பு ஆயுதமுனை கொள்ளைகளுக்கு இந்த இருவரும் பிரதான சூத்திரதாரிகளாக காணப்பட்டுள்ளனர். இவர்களால் கொள்ளையிடப்பட்ட பணம், நகைகள், மற்றும் பொருட்களின் பெறுமதி சுமார் 50 இலட்சம் என்று நம்பப்படுகிறது.வவுனியா வாழ் மக்களை பெரிதும பாதிப்புக்குள்ளாக்கி வந்த இந்தச சம்பவங்கள் சம்பந்தமாக வவுனியா நீதவான் எம்.இளஞ்செழியனின் பணிப்பில் வவுனியா பொலிசார் ஐ.பி. நேசராஜா தலைமையில் நடவடிக்கையினை எடுத்திருந்தார்கள் சந்தேக நபர்கள் வவுனியாவிலும் யாழ்ப்பாணத்திலும் வைத்துக் கைது செய்யப்பட்டு விசாரணைக்கு உட்படுத்தப்பட்டனர். விசாரணையின்போது 30 இலட்சம் பெறுமதியான பொருட்கள் அடையாளம் காணப்பட்டன. மேற்படி இரண்டு நபர்களுக்கு எதிராக தனித்தனியே 30 வழக்குகள் பதியப்பட்டு விசாரணைகள் இடம் பெற்றது. விசாரணைகளுக்குப் பொலிசாருக்கு பூரணஒத்துழைப்பு வழங்கியதன் காரணமாகவும் களவுகள் சம்பந்தமாக ஒப்புக் கொண்டதன் காரணமாகவும் ஏற்கனவே சிறையில் இருந்ததன் காரணமாகவும் ஏககாலத்தில் நிறைவேற்றும்படி 14 வருடசிறைதண்டனையாக வவுனியா மாவட்ட நீதவான எம். இளஞ்செழியன் சிறைச்சாலை அதிகாரிகளுக்கு உத்தரவிட்டுள்ளார். இந்தவழக்குடன் தொடர்புடைய மூன்று பேருக்கான வழக்கு விசாரணையினை 20 ஆம் திகதி வரை ஒத்திவைததுள்ளார். (27)

# யாழ்.பல்கலை ஊழியர் போராட்டத்தால்

# கற்றல் செயற்பாடுகள் இடைநிறுத்தம்

யாழ்.பல்கலைக்கழக ஊழியர்களினால் மேற்கொள்ளப்பட்டு வரும் தொடர் வேலைநிறுத்தப் போராட்டத்தினால் கற்றல் செயற்பாடுகள் அனைத்தும் நேற்றுடன் இடைநிறுத்தப்பட்டுள்ளது.

நாடளாவிய ரீதியினில் அனைத்துப்பல்கலைக்கழக ஊழியர் சங்கங்களினாலும் தமது கோரிக்கைகளை முன்வைத்து மேற்கொள்ளப்பட்டு வந்த வேலை நிறுத்தப் போராட்டத்தினால் யாழ்.பல்கலைக்கழகம் தவிர்ந்த ஏனைய பல்கலைக்கழகங்கள் முற்றாக மூடப்பட்டிருந்தன.




ஆயினும் யாழ்.பல்கலைக்கழக ஊழியர் சங்கமும் வேலை நிறுத்தத்தினை மேற்கொண்டிருந்த போதிலும் அடிப்படை தேவைகள் பாதிக்கப்படாத நிலையில் தமது போராட்டத்தினை முன்னெடுத்திருந்தனர்.

எனினும் நேற்று முதல் யாழ்.பல்கலைக்கழக வளாகத்திற்கான குடிநீர் விநியோக பணிகளில் ஈடுபட்ட ஊழியர்களும் இவ் வேலை நிறுத்தத்தில் குதித்ததையடுத்தே கற்றல் செயற்பாடுகள் முடங்கிப்போயுள்ளது.

இதனிடையே இடைநின்று போயுள்ள கற்றல் செயற்பாடுகள் மீள எப்போது ஆரம்பிக்கப்படுமென்பது தொடர்பான தகவல்கள் ஏதும் வெளியாகாத நிலையில் யாழ்.பல்கலைக்கழக அனைத்துப் பீடமாணவர் ஒன்றியம் இன்று கூடவுள்ளது. தற்போது எதிர்கொள்ளப்படும் பிரச்சினைகள் தொடர்பாக இச்சந்திப்பில் கூடி ஆராயப்படவுள்ளதாக மாணவர் ஒன்றிய பிரதிநிதிகள் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (27)

# அமைச்சரவை மீளமைப்பு அடுத்த வாரம் இடம்பெறலாம்

அமைச்சரவை மீளமைப்பு ஒன்று எதிர்வரும் வாரத்தில் இடம் பெறவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது

இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் அரசாங்கத்துடன் இணைந்ததன் பின்னர் இந்த மீளமைப்பு மேற்கொள்ளப்படவுள்ளது

இதன் அடிப்படையில் இலங்கை தொழிலாளர் காங்கிரஸுக்கு தோட்ட உட்கட்டமைப்பு மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சு என்பன ஒதுக்கப் படவுள்ளன. எனவே அதற்குப் பதிலாக சி.பி ரட்நாயக்கவுக்கு தோட்ட கைத்தொழில் அமைச்சும், அமைச்சர் மங்கள சமரவீரவிடம் உள்ள தகவல்துறை அமைச்சு அனுர பிரியதர்சன யாப்பாவுக்கும் வழங்கப்படவுள்ளது. பெரும்பாலும் பீலிக்ஸ் பெரேராவின் போக்குவரத்து அமைச்சு மாற்றம் பெற வாய்ப்புகள் இருக்கின்றன. இதேவேளை ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸில் இருந்து பிரிந்து வந்த மூவருக்கும் பிரதி அமைச்சுப் பதவிகள் வழங்கப்பட ஏற்பாடுகள் நடைபெற்ற போதும் பிரதி அமைச்சுக்களில் வெற்றிடங்கள் இல்லை என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில் சபாநாயகருக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டு வரப்பட்டு அந்தப் பதவிக்கு கீதாஞ்சன குணவர்த்தனவை நியமித்து பிரதி சபாநாயகர் நிலையை ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸில் இருந்து பிரிந்து வந்த ஒருவருக்கு வழங்க முடிவெடுக்கப்பட்டுள்ளது.

எனினும் நேற்று முன்தினம் எதிர்க்கட்சி தலைவரைச் சந்தித்த இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் தலைவர் தாம் சபாநாயகருக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணைக்கு ஆதரவளிக்கப் போவதில்லை என உறுதியளித்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (32)

# லக்ஸ்மன் கதிர்காமர் ஜப்பானுக்கு விஜயம்

(கொழும்பு)

உத்தியோகபூர்வ விஜயம் ஒன்றை மேற்கொண்டு வெளிநாட்டமைச்சர் லக்ஸ்மன் கதிர்காமர் ஜப்பானுக்குச் சென்றுள்ளார். ஜப்பானின் வெளிநாட்டமைச்சர் மேடம் கவாகுச்சியின் அழைப்பை ஏற்றே அவர் இந்த விஜயத்தை நேற்று முன்தினம் மேற்கொண்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இதன்போது நிதி விடயங்கள் உட்பட்ட பல விடயங்கள் குறித்துப் பேச்சுவார்த்தைநடத்தப்படவுள்ளதாக வெளிநாட்டமைச்சுத் தெரிவித்துள்ளது.

அத்துடன் வெளிநாட்டமைச்சர் தமது விஜயத்தின் போது ஜப்பானியப் பிரதமர் கொய்சுமியையும், விசேட தூதுவர் அகாஷியையும் சந்தித்துப் பேசவுள்ளார். (32)

### மீனவர்...

பிரதிநிதிகள், அரச அதிபர் முல்லைத்தீவு, போர்நிறுத்த கண்காணிப்புக் குழு,வன்னி பாராளுமன்ற உறுப்பினர்கள்ஆறு பேருக்குரிய மகஜர்களும், முல்லைத்தீவு மாவட்ட அரச அதிபர் இமெல்டா சுகுமார் அவர்களிடம் முல்லை மாவட்ட கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்தலைவர் அ.மரியராசாவால் கையளிக்கப்பட்டன.

இக் கண்டனப் பேரணிக்காக வர்த்தக சங்கங்கள், தொழில்சார் நிறுவனங்கள், அரச சார்பற்ற நிறுவனங்கள் என்பன தமது நிலையங்களை மூடி இக்கண்டனப் பேரணியில் கலந்து கொண்டனர். அத்தோடு கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சகல கிளைகளும் கலந்து கொண்டமையும் குறிப்பிடத்தக்கது.

மேலும் மகஜரைப் பெற்றுக் கொண்ட அரச அதிபர்தான் உடனடியாக சம்மந்தப்பட்ட அனைவருக்கும் மகஜரை அனுப்பி வைத்து மீனவரின் பிரச்சனைகளுக்கு உரிய தீர்வு எடுக்கும்படி வேண்டிக்கொள்வேன் என்றும் குறிப்பிட்டார். (20,கு)

### கழுத்து...

வரத்து நடவடிக்கைகள் துண்டிக்கப்பட்டதுடன் பெருமளவு பொலிசாரும், படையினரும் குவிக்கப்பட்டிருந்தனர்.

சம்பவ இடத்திற்கு நேரில் விஜயம் செய்த யாழ்.நீதவான் மரண விசாரணைகளின் பின்னர் சடலத்தினை யாழ்.போதனா வைத்திய சாலையின் பிரதேச அறையில் ஒப்படைக்க உத்தரவிட்டிருந்தார்.

குறித்த இளைஞன் யாழ்.நகரப் பகுதியிலுள்ள புடவை நிலையமொன்றில் கடந்த பல வருடங்களாகப் பணியாற்றி வந்திருந்ததாகவும் அத்துடன் வாகனங்கள் மூலம் மணல் ஏற்றிப்பறிக்கும் தொழிலை மேற்கொண்டிருந்ததாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

(27,33)

### ஐந்து...

சோ.தங்கன், தமிழீழ மாவீரர் போராளிகள் குடும்ப நலன்காப்பகப் பொறுப்பாளர் கு.திருக்குமரன், கிளிநொச்சி மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் காண்டீபன், மாவட்டக் காப்பகப் பொறுப்பாளர் ஆ.முத்தன், தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தைச் சேர்ந்த அமுதாப், வரன் மற்றும் போராளிகள் ஏனைய மாவட்ட குடும்ப நலன்காப்பகப் பொறுப்பாளர்கள் கலந்துகொண்டு சிறப்பித்தமை குறிப்பிடத்தக்கது.

(சோ,கு)

### சமாதான...

கப்பட்டு அது ஒரு அர்த்தமற்ற நிலையில் இருக்குமாக இருந்தால் விசேடமாக ஒரு பகுதியிடம் இடைக்கால நிலைப்பாடு சம்பந்தமாக எங்களுடைய பிரேரணைகளை வைத்து அந்தப் பிரேரணைகளின் அடிப்படையில் பேசுவதற்கு திகதிகளைக் குறிப்பிடும் படியாகக் கேட்டு அதிலிருந்து ஏறத்தாழ பத்து மாதங்கள், பதினொரு மாதங்கள் சென்ற பிறகும் கூட அந்தக் கருமத்தை நாங்கள் வென்றெடுக்க முடியாமல் இருக்கின்றோமாக இருந்தால் அது ஒரு சமாதானத்திற்கு உகந்த நிலை இல்லை என்பதே எனது கருத்து.

சமாதானப்பேச்சுத் தொடர்பாக நாங்கள் இருதரப்பினருடனும் பேசியுள்ளோம்.

சிலமாதங்களுக்கு முன்பதாக சனாதிபதியைச் சந்தித்து இது தொடர்பாகப் பேசினோம்.

அதன்போது சனாதிபதி சில உறுதி மொழிகளை எமக்குத் தந்தார்.

ஒருகால கட்டடத்தில் தான் புலிகளின் இடைக்கால நிர்வாகத்தை எதிர்த்ததாகவும் இறுதித்தீர்வை எதிர்பார்ப்பதாகவும். ஆனால் தற்போதைய நிலைப்பாட்டை உணர்ந்துதான் விட்டு கொடுப்புடன் இடைக்காலப் பிரேரணைகள் சம்பந்தமாக மாத்திரம் தான் பேசுவதற்குத் தயார் என்றார்.

இதனைமுழுமையாக ஏற்றுக் கொள்ள முடியா விட்டாலும் கூட அந்த அடிப்படையில் தான் பேசத் தயார் எனவும் அந்த விதமாக பேச்சுவார்த்தைகள் நடைபெற்று ஒரு தீர்வை அடைந்ததன் பிறகு அது எழுத்தில் வரையப்பட வேண்டும். அத்துடன் இறுதித்தீர்வு சம்பந்தமாக பேச்சுவார்த்தை ஆரம்பிக்க வேண்டும் என்றார்.

ஆனால் இடைக்கால நிர்வாக தன்னாட்சி சம்பந்தமான ஒரு தீர்வு அமுற்படுத்தப்படவேண்டியது அத்தியாவசியம். ஏனெனில், நாட்டில் இருக்கின்ற பிரச்சினைக்கு முக்கிய காரணம்.

இலங்கை அரசுகளினால் தமிழ் மக்களுக்கு அளிக்கப்பட்ட வாக்குறுதிகள் நிறைவேற்றப்படவில்லை.

ஆனபடியால் ஓர் இடைக்கால சுயாட்சி அமைப்பு வந்தால் மாத்திரம் பெறாது. அது அமுற்படுத்தப் படவேண்டும். அதற்குப் பிறகு நிச்சயமாக தமிழீழ விடுதலைப் புலிகளைப் பொறுத்தவரையில் அவர்கள் ஓர் இறுதித்தீர்வு சம்பந்தமாகப் பேசுவதற்குத் தயாராக இருப்பார்கள் என்றார்.

### இனப்...

இந்த வகையில் மாற்று யோசனைகளை முன்வைக்க மறுக்கும் போது இறுதித்தீர்விற்கு எந்த வகையில் உதவுமென்று கேட்கப்பட்ட கேள்விக்கு பதிலளித்த அவர்.

மட்டுப்படுத்தப்பட்ட வகையில் அதிகாரப் பரவலாக்கத்தையும் நிர்வாகப் பரவலாக்கத்தையும் வழங்குவது விடுதலைப்புலிகளுடனான முரண்பாட்டைத் தீர்ப்பதற்கு வழிவகுக்கும் என்று தெரிவித்துள்ளார்.

எது எப்படியிருப்பினும் இறுதித் தீர்விற்கான முடிவை பேச்சுவார்த்தை மேசையிலேயே தீர்மானிக்க முடியும் என்று கூறிய அவர், தமது இலக்குக் குறித்த விடயங்கள் எதனையும் தெரிவிக்கவில்லையென்று இந்திய நாளிதழ் தெரிவித்துள்ளது.

இதேவேளை 2000 ஆம் ஆண்டு இலங்கை சனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க முன்வைத்த பிராந்திய ரீதியிலான அதிகாரப் பரவலாக்கத்தை ஜே.வி.பி ஏற்றுக்கொள்கின்றதா? என்று கேட்கப்பட்ட மற்றுமொரு கேள்விக்கு பதிலளித்த விஜிதஹேரத் சனாதிபதியால் முன்வைக்கப்பட்ட அந்தந்தத் திட்டத்தை விடுதலைப்புலிகளும் அந்த நேரத்தில் நிராகரித்திருந்தாகத் தெரிவித்துள்ளார். இந்நிலையில் எந்தத் தீர்வு யோசனையில் அதிகாரப் பரவலாக்கம் கூட உள்ளது. அல்லது குறைய உள்ளது என்பது கேள்வியல்ல என்று தெரிவித்த அவர் ஜே.வி.பியின் பார்வை இறுதித்தீர்விற்கான அடிப்படை அனைவருக்கும் சமத்துவமான உரிமைகள் என்பதுவே என்றும் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை ஒன்று பட்ட இலங்கைக்குள் காணப்படும் தீர்வு ஏனைய நாடுகளின் மாதிரியினைக் கொண்டதாக அல்லாமல் இலங்கையின் எதிர்காலத்தை அடிப்படையாகக் கொண்டதாக இருக்குமென்றும் அமைச்சர் விஜிதஹேரத் அந்த நாளிதழுக்குத் தெரிவித்துள்ளார். அதேவேளை இலங்கையின் இனப்பிரச்சினை குறித்து ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி தொடர்ந்து கலந்துரையாடலில் ஈடுபட்டுள்ளதாகவும் பெரும்பான்மை மக்கள் ஏற்றுக் கொள்ளும் தீர்வின் அடிப்படையில் நிரந்தரத் தீர்வு காண்பதற்கு ஜே.வி.பி தயாரெனவும் கட்சியின் செயலாளர் ரில்வின் சில்வா தெரிவித்துள்ளார்.

### வவுனியா...

வவுனியா மாவட்ட அரசியல் துறை பொறுப்பாளர் ஞானவேல் தெரிவித்தார்.

மட்டக்களப்புப் பகுதியில் இருந்து வந்த போராளிகளில் ஒருவர் தனது சகோதரியை வன்னிப் பகுதிக்கு அழைத்து கொண்டு சென்றதாகவும் தாய் தந்தையர் இல்லாத 14 வயது உடைய தனது சகோதரியை வன்னிப்பகுதிக்கு அழைத்துக் கொண்டு சென்ற போது அந்தச் சிறுமி தொடர்பாக இராணுவம் அடாவடித்தனமான கேள்விகளைக் கேட்டு தொந்தரவு செய்யதாகவும் தெரிவிக்கப்படுகிறது. இராணுவம் மூன்றறை மணிநேரம் தடுத்துவைத்ததுடன் வன்னிப் பகுதிக்கு செல்ல அனுமதிக்கவில்லை என்றும் ஞானவேல் தெரிவித்தார். இராணுவம் யுனிசெப், இலங்கை போர்நிறுத்தக் கண்காணிப்பு குழு ஆகியவற்றுக்கு தெரிவித்து அவர்கள் ஓமந்தைப் பகுதிக்கு சென்றும் எந்தவிதமான ஓர் இணக்கப்பாட்டுக்கும் வரவில்லை என்றும் தெரிவிக்கப்படுகிறது. இதனையடுத்து தமது பிரயாணத்தினை இடையில் கைவிட்டு வவுனியாவுக்கு அம் மூன்று போராளிகளும் திரும்பியுள்ளனர்.

அண்மை நாட்களாக வவுனியாவில் பெண் போராளிகளின் அரசியல் நடவடிக்கைக்கு இடஞ்சல் ஏற்படுத்தும் அதேசமயம் புரிந்துணர்வு உடன்படிக்கைக்கு அமைவாக சுதந்திரமான அரசியல் செயற்பாட்டுக்கு இராணும் இடைஞ்சல் ஏற்படுத்துவதானது வேதனை தரும் ஒரு விடயமாக இருப்பதாகவும், இது சம்பந்தமான ஒரு இறுக்கமான முறைப்பாட்டை வவுனியா போர் நிறுத்த கண்காணிப்பு குழுக்கு தெரிவித்திருப்பதாகவும் ஞானவேல் மேலும் தெரிவித்தார். (21)

ஏற்கனவே, சின்னமுத்து ருபெல்லா தடுப்பு மருந்து பெற்றிருப்பினும்
11ஆம், 12ஆம் திகதிகளில் மீளவும் பெற்றுக்கொள்ளுங்கள்.

தமிழீழ சுகாதார சேவைகள்

## தவறிவிட்டது

திருமண வைபவத்திற்காகக்கொண்டு செல்லப்பட்ட ஒரு தொகுதி நகைகள் 05.09.2004 (ஞாயிற்றுக்கிழமை) அன்று கிளிநொச்சிச் சந்தையில் உள்ள புடைவைக்கடை ஒன்றிலிருந்து யாரோ ஒருவரால் தவறுதலாக எடுத்துச் செல்லப்பட்டு விட்டது. தயவுசெய்து அந்நகைகளை மீண்டும் மனிதாபிமானத்துடன் எம்மிடம் ஒப்படைக்குமாறு கேட்டுக்கொள்கின்றோம். கீழ்க் காணும முகவரிக்கு ஒப்படைக்குமாறு தாழ்மையுடன் கேட்டுக்கொள்கின்றோம்.

**மகிழ்ச்சி உணவகம்,**
**நாச்சிக்குடா சந்தி,**
**முழங்காவில்.**

**ஈழநாதம் விளம்பரப்பணிமனை,**
**யாழ்சாலை,**
**கிளிநொச்சி.**

(5930)

இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2004ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 08ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.